# பயில்நிலம்

மாத இதழ்



மே 2005

ரூபா 20.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய கலை இலக்கியப் பேரவையின்
## புத்தகப் பண்பாட்டுப் பயணம் - 2005

தேசிய கலை இலக்கியப் பேரவை அதன் புத்தகப் பண்பாட்டுப் பயணத்தின் அடுத்த மைல்கல்லை அடையும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அதன் பொருட்டு எதிர்வரும் **19.08.2005** **வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு** **கொழும்பு - 06, வெள்ளவத்தையில்** அமைந்துள்ள **கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் புத்தக விழா** ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. இந்நிகழ்வில் பின்வரும் சிறப்பு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

### ரூபா 50,000/- வாசகர் பணப்பரிசு வெல்லும் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 50,000/- ரூபாவை வெல்ல, தேசிய கலை இலக்கியப் பேரவையால் விநியோகிக்கப்பட்டுள்ள நூற்பட்டியலில் இருந்து 1000/- ரூபா பெறுமதியான நூல்களை முன்கூட்டியே கொள்வனவு செய்யவேண்டும். அவ்விதம் கொள்வனவு செய்பவர்களுக்கு கொள்வனவு சிட்டை வழங்கப்படும். இக்கொள்வனவு சிட்டையின் அடிக்கட்டைகள் குலுக்கப்பட்டு தெரிவு செய்யப்படும் ஒருவருக்கு ரூபா 50,000/- பணப்பரிசாக அன்றைய தினம் அதே அரங்கில் வழங்கப்படும்.

### ரூபா 10,000/- இலக்கிய ஆர்வலர் பணப்பரிசு வெல்லும் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் கலை, இலக்கியம் மற்றும் தேசிய கலை இலக்கியப் பேரவை தொடர்பான 25 கேள்விகள் கேட்கப்பட்டு புள்ளிகள் இடப்படும், 10 கேள்விகளுக்கு மேல் சரியான விடையளித்து அதில் கூடிய புள்ளிகள் பெறுபவருக்கு ரூபா 10,000/- பணப்பரிசு வழங்கப்படும்.

**புத்தகப்பண்பாட்டை மேம்படுத்துவோம்,**
**அரங்கப்பண்பாட்டை வளப்படுத்துவோம்.**
**அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு**
**சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**
**அனைவரும் வருக, பரிசுகள் வெல்க.**

**தேசியகலை இலக்கியப் பேரவை**
இல. 44, கொழும்பு மத்திய சந்தைத் தொகுதி, கொழும்பு -11.
தொ.பே.இல. 2381603, தொலைநகல். 2473757.



மாற்றங்களை வேண்டி.....

**பயில்நிலம்**
மே 2005 மாத இதழ்

**இதழாசிரியர்:**
வி. பிரபுநாதன்

**விநியோகம்:**
தே. ஜனமகன்

**விளம்பரம்:**
பொ.கோபிநாத்

**பயில்நிலம் குழு:**
தெ. ஞா மீநிலங்கோ
கு. பாரதி
தே. அபிலாஷா
ந. பிரசாந்த்
ஸைரா கலீல்
கி. திவாகரன்
க. அபிராமி
செ. நந்தமோகன்
செ. கௌரி
நா. ரவிச்சந்திரகுமார்
த. பார்த்திபன்

**வெளியிடுவோர்:**
பயில்நிலம்
59/3, வைத்யா வீதி,
தெஹிவளை
தொ.பே. 5527074

**பக்க வடிவமைப்பு:**
பிரியா விஜயரட்னம்

**அச்சுபதிப்பு:**
விகடன் பிரின்ரஸ்
கொழும்பு - 06
தொ.பே. 2361329


இதழில்........







| | பக்கம் |
|---|---|
| உழைக்கும் கரங்களுக்கு | 03 |
| மே தினத்தை வென்றெடுத்த கதை | 04 |
| ஒற்றுமை | 07 |
| நகர்வலம் | 10 |
| சித்திரவதை | 18 |
| சரித்திரம் | 19 |
| புழுதிபடிந்த வெள்ளைப் பூக்கள் | 20 |
| பூச்சியம் | 25 |
| புரிதல் | 25 |
| உயிரோவியமாய் | 25 |
| நிழலில் மறைந்த நிஜங்கள் | 26 |
| கொள்கை வீரன் | 28 |
| கருத்துமேடை | 29 |
| சாகப்போகும் சென் கிளையர் நீர்வீழ்ச்சி | 30 |
| வாசகர் மேடை | 32 |
| உங்களோடு சில நிமிடங்கள் | 33 |
| நினைத்துக் கொள்வேன் | 34 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியலின் பாதைக்கே விழிப்பு

ஆட்சி அதிகாரத்தில் மாறிமாறி இருந்து வரும் ஆளும் வர்க்க ஆதிக்கக் கட்சிகளும், அவற்றின் ஆண்ட பரம்பரைத் தலைமைகளும் நாட்டு வளங்களையும், மக்களின் உழைப்பு சக்தியையும், உற்பத்தித் துறைகளையும் மீண்டும் முதலாளிய ஏகாதிபத்திய பல்தேசியக் கம்பனிகளுக்கும், சுரண்டல் கொள்ளையிடுவோருக்கும் விற்றுப் பிழைப்பு நடாத்தும் திட்டங்களையும், செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றன. இது நாட்டை மறு கொலனியமாக்கி, ஏகாதிபத்தியத்தின் இரும்புப் பிடியான நவ கொலனிய அமைப்பு முறைக்குள் நாட்டையும், மக்களையும் இறுக்கிக் கொள்வதாகும்.

சுனாமியின் பெயரைப் பாவித்து இலங்கையில் ஆக்கிரமிப்புச் செய்யும் வகையில் இங்கு வந்திருக்கும் அமெரிக்கப் படைகளுக்கும், வேறு அந்நிய தலையீடுகளுக்கும் எதிராக எத்தனைபேர் குரல் கொடுக்கின்றார்கள்.

இவற்றையெல்லாம் தட்டிக் கேட்க ஏன் ஒரு எழுச்சி உருவாகவில்லை? சமூகம் வலியை மறந்துவிட்டதா? அதன் உணர்வுகளை இழந்து விட்டதா? வலியை உணர மறந்துவிட்டால் அல்லது அந்த உணர்வை இழந்து விட்டால் ஆபத்து மட்டும் அல்ல அழிவுந்தான். சமூகத்தின் வலியை அது இழந்துவிடாமல் இருக்கவும், அந்த வலியின் காரணங்களைக் கண்டறிந்து அதனைத் துடைத்தெறியாமலும் வளர்ச்சி என்பது ஒரு கட்டுக்கதை.

வலியை உணர்வதற்கும் இன்று பயிற்சி தேவைப்படுகிறது. இந்தப் பயிற்சி பல்வேறு முயற்சிகளைக் கொண்டது. இது குறைந்த அளவிலேயே நடைபெறுகிறது. ஒரு சில விதிவிலக்குகள் தவிர, நமது கல்வி, கலை, இலக்கியம், சினிமா, ஊடகம் அனைத்துமே அதிகார குரல்களாகவே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இத்தகையதொரு சூழ்நிலையில் மாற்றங்களை வேண்டிய பயணத்தில் நம்மை விட்டுச் சென்று விடாமல் பார்த்துக் கொள்வது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

புதிய ஜனநாயகம், புதிய வாழ்வு, புதிய பண்பாடு. ஆம், ஆளுமை பெற்ற மனிதர்களின் வரவுக்காய் சிந்திப்போம், செயற்படுவோம். சேர்ந்து பாடுபடுவோம். புதிய பூமியின் முரசின் முழக்கம் அருகினில் கேட்கிறது.

"ஒளிவிடும் விண்மீன் வருவதும் உறுதி
சூழ்ந்திடும் இருளும் அகல்வது உறுதி",

*ஆசிரியர்குழு*

இதயத்தில் உறுதி உண்டு இடர்பாட்டை வெல்லுதற்கு
இடர்பாட்டை வெல்லுதற்கு இதயமது இருக்கையிலே
இரும்பென்ன உருக்கென்ன எல்லாமே தலைவணங்கும்.



# உழைக்கும் கரங்களுக்கு..............!

கவிதை

நாளும் புதுப்பொலிவுடன்
விளங்கும்
நாகரிக உலகின்
நன்றியறிதலின் வெளிப்பாடாய்
வந்துபோகும் தினங்களின்
பட்டியலில் தொழிலாளர்தினமும்
சேர்க்கப்பட்டுவிட்டது।

அலங்கார மேடைகளும்
ஊர்தி ஊர்வலங்களும்
வாழ்த்துச் செய்திகளும்
ரோஜாப்பூ மாலைகளுமாய்
ஏழை உழைப்பாளரின்
உழைப்பில் உயர்ந்த
முதலாளிகள் முகமெல்லாம்
புன்னகைபூசி தொழிலாளரின்
தோளில் கைபதித்து,
"முதலாளி தொழிலாளிகளின்
தோழன்" எனும் வாசகத்துடன்
காட்சி கொடுக்கின்றனர்
பத்திரிகைப் புகைப்படத்திற்கு।

உழைத்துக் களைத்தவனின்
உழைப்பை உலகுக்கு
உணர்த்தும் நாளில்
ஊர் ஊராய் கூட்டங்கள்
ஆரவாரமாய் நடக்கின்றன।
மறுநாள்।
அமைதியாய் பொழுது விடியும் –
நேற்று
வாய்நிறைந்த புன்னகையுடன்
வாழ்த்தியமுதலாளி – புகழ்மாலை
போர்த்திய வாயால் –
வசவுமாலை
போர்த்திடுவார்।

மிருகங்களுக்கு ஒப்பாய்-? - அல்ல
அவற்றிற்கும் கீழாய்
தொழிலாளர் மதிக்கப்படுவர்।



நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த
உழைத்தவன் வீட்டில் – உடல்
வற்றி உலர்ந்து பசியால் வாடும்
பிஞ்சுகளின் கண்ணீரை
யாரறிவார்?

உழைப்பாளிகள் உழைப்பை
உறிஞ்சி உடம்பை வளர்த்திட்ட
முதலாளித்துவ அட்டைகளின்
மமதையை யாரறிவார்?

நாடு வாழ்கிறது
உழைக்கும் கரங்களால் – அவன்
வீடு வீழ்கிறது வறுமையின் பிடிக்குள்।
காலம் காலமாய் அடிமையாய்
நடாத்தப்பட்ட அடிமாடுகளாய்
உழைப்பாளிகள்।
ஆண்டு,அனுபவித்து அரசனாய வாழ்ந்த
முதலாளித்துவ சமுதாயத்தின்
இளம் தலைமுறையும் வளர்கிறது.
அவ்விதமே।
என்று மாறும் இந்நிலை?
பூமிக்கு உணவளிக்கும்
உழைக்கும் கரங்களுக்கு
உழைப்பின் பலனாய்
என்று கிடைக்கும்
ஒருபிடி உணவு?

இ.பாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே தினத்தை வென்றெடுத்த கதை

### அறிமுகம்

இன்றைய காலப்பரப்பில், பல சமயங்களில் எதற்காக கொண்டாடப்படுகிறது என்பதே தெரியாமல் பல தினங்கள் கொண்டாடப்படுகின்றன. எத்தனையோ தினங்கள் கொண்டாடப்பட்டாலும் உழைக்கும் மக்களின் தினமாக அமைவது என்னமோ மேதினம் மட்டும் தான். இந்த மேதினத்தின் தோற்றத்தையும் அதனோடு இணைந்த குருதி தோய்ந்த பக்கங்களையும் ஓர் மீள்நினைவூட்டல் செய்வதற்காய் ஒரு பின்னோக்கிய பார்வை.

### ஆரம்ப காலம்

19ம் நூற்றாண்டின் தொடக்க காலங்களில், உதிக்கும் சூரியன் மறையும் வரையும், இதற்கு மேலாகவும் வேலை செய்வதே தொழிலாளரின் கடமையாக இருந்தது. இது பல ஆண்டாண்டு காலமாய் தொடர்ந்ததால், இதன் கொடுமை குறித்த தெளிவை பலரும் கண்டுகொள்ளவில்லை. 1806ல் அமெரிக்க தொழிற் சங்கத் தலைவர்கள் வேலைநேரத்தைக் குறைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து வேலைநிறுத்தத்தை ஒழுங்கு செய்ய முயற்சித்ததற்காக குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டார்கள். இவ்வழக்கே தொழிலாளர்கள் நாள் ஒன்றுக்கு 15 மணித்தியாலத்திற்கு மேலாக வேலை செய்கிறார்கள் என்பதை உலகிற்கு உணர்த்தியது. இதன் விளைவாலேயே "தொழிலாளர்கள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு வேலை நேரம் குறைக்கப்படவேண்டும்" என்றும் குரல்கள் ஒலிக்கத் தொடங்கின.

1827ல் முதலாவது தொழிற் சங்கம் அமெரிக்காவில் தோற்றம் பெற்றது. இதைத் தொடர்ந்து பல தொழிற்சங்கங்கள் தோன்றின. இவை பத்துமணித்தியால வேலை நிறுத்தத்தை வலியுறுத்தி நின்றன. இந்த அமெரிக்க தொழிற்சங்கங்கள் குறித்து கார்ல்மாக்ஸ் சொன்ன கருத்து முக்கியமானது.

"ஐக்கிய அமெரிக்காவில் எந்தவகையான சுதந்திரமான தொழிற்சங்க அமைப்புகளும், ஜனநாயகத்தின் ஒரு பகுதியாக அடிமைத்தனம் இருக்கும் வரை நோய்வாய்ப்பட்டே இருக்கும். வெள்ளைத் தோலை உடைய தொழிலாளியால் கறுப்புத்தோல் என முத்திரை குத்தப்பட்ட தொழிலாளியை விடுவிக்க முடியாது. ஆனால் அடிமைத்தனத்தின் மறைவின் பின்பே எந்தவொரு பயன்தரக் கூடிய மாற்றத்தையும் எதிர்பார்க்கலாம".

(1867ம் வெளியிடப்பட்ட மூலதனம் பகுதி - 1 இன் உழைப்பாளர் தினம் என்ற அத்தியாயத்தில் இருந்து.)

### எட்டு மணிநேரவேலை

ஒரு நாளைக்கு 8 மணித்தியால வேலை என்ற எண்ணக்கரு அவுஸ்ரேலியாவிலேயே தோற்றம் பெற்றது. 1856ல் அங்குள்ள தொழிலாளர்கள் குறித்த ஒரு நாளில் முற்றாக வேலை நிறுத்தத்தை மேற்கொண்டு 8 மணித்தியாலம் வேலைக்காக குரல் கொடுக்க முடிவெடுத்தனர். அவர்கள் இதை நிகழ்த்திய தினம் ஏப்பிரல் 21ம் திகதி ஆகும். முதலில் அவர்கள் இதை 1856ம் ஆண்டு மட்டுமே செய்வதாக இருந்தனர். ஆனால் முதலாவது போராட்டத்தின் வலுவும், வெற்றியும் அதிக தொழிலாளர்களின் பங்கேற்பும் ஒவ்வொரு வருடமும் இதைச் செய்வதற்குத் தூண்டியது.

இவர்களை பின்பற்றி 1886ல் அமெரிக்க தொழிலாளர்கள் மே முதலாம் திகதியை தாங்கள் சர்வதேச வேலை நிறுத்த தொழிலாளர் தினமாக பிரகடனப் படுத்தினர். 1886ல் 2 லட்சம் தொழிலாளர்கள் தங்கள் வேலைகளை விட்டு 8 மணிநேர வேலைக்காக போராடினர்.



### சிக்காகோ வேலைநிறுத்தமும் ஹெ-மாக்கற் சம்பவமும்

1886ல் மேதினத்தன்று சிக்காக் கோவில் பல லட்சம் தொழிலாளர் குவிந்தனர். அவர்கள் 8 மணி நேர வேலையை முன்நிறுத்தி ஒரு பேரணியை நடத்தினர். அரசும் முதலாளிகளும் இணைந்து பேரணியில் கலந்து கொண்டோரை கைது செய்தனர். அத்துடன் தலைவர்களை அழிப்பதோடு இத்தொழிலாளர்கள் அமைப்பையே முற்றுமுழுதாக அழிப்பது என உறுதி பூண்டனர். இதன் பின்னர் மே 3ம், 4ம் திகதிகளில் நடைபெற்ற நிகழ்வுகளே புகழ்பெற்ற ஹெ-மாக்கற் சம்பவமாக (Hay market) நினைவு கூறப்படுகிறது. இது மே முதலாம் திகதி விளைவாக உருவானது. மே 3ம் திகதி அமைதியான எதிர்ப்பு பேரணி நடைபெற்றது. இதை பொலிசார் வன்முறையான தாக்குதல் மூலம் ஒடுக்கமுயன்றனர். இதன் விளைவால் ஆறு தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.

மே 4ந் திகதி ஹெ-மாக்கற் சதுக்கத்தில் கூடியிருந்த தொழிலாளர்களை நோக்கி பொலிசார் தாக்குதல் நடத்தினர். மக்களுக்குள் குண்டு ஒன்று வீசப்பட்டது. இதனால் ஏற்பட்ட கைகலப்பில் 7 பொலிசாரும் 4 தொழிலாளர்களும் இறந்தனர். ஹெ-மாக்கற் சதுக்கம் இரத்த வெள்ளத்தில் மிதந்தது.

### சர்வதேச மேதினம் குறிக்கப்பட்டது

1889ல் யூலை 14ம் திகதி பெஸ்ரில் கோட்டையின் வீழ்ச்சியின் நூற்றாண்டு நினைவாக, உலக நாடுகளின் தொழிலாளர் வர்க்கத்தினர் ஒன்று கூடி மே முதலாம் திகதியை சர்வதேச தொழிலாளர் தினமாக பிரகடனப்படுத்தினர். 1890 மே முதலாம் திகதி 4வது ஜேர்மன் மொழிப்பதிப்பிற்கான கம்யூனிச பிரகடனத்தின் முன்னுரையில் பிரட்ரிக் ஏங்கல்ஸ் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"நான் இவ்வரிகளை எழுதுகின்ற வேளையில் உலக தொழிலாளர்கள் ஒன்றிணைந்த ஒரே குடையின்கீழ் ஒரே குறிக்கோளுக்காக போராடுகிறார்கள். நாளுக்கு 8மணிநேர வேலையை சட்டபூர்வமாக்குவதன் மூலம் முதலாளிகளுக்கும் நில உடைமையாளர்களுக்கும் தொழிலாளர்கள் ஒன்றுபட்டுள்ளோம். உலகம் இன்று எங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில். இது உண்மை இன்றி வேறில்லை என புரியவைக்க முடியும். இந்த அருமையான நிகழ்வுகளை என்னுடன் இருந்து தன் கண்களால் பார்க்க மார்க்ஸ் இல்லை என்பதே என் வருத்தம"

**மே தினத்தை சிதைக்கும் முயற்சிகள்**

சீர்திருத்தவாதிகள் என்று சொல்லிக் கொண்டவர்கள் மேதினத்தை பலவழிகளில் சிதைக்க முயன்றனர். அவர்கள் மேதினமானது மே முதலாம் திகதிக்கு கிட்டிய ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட வேண்டும் என்றனர். உண்மையில் ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை இல்லை என்பதால் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ய தேவை இல்லை. இதன் மூலம் முதலாளிகள் நலன் பாதுகாக்கப்படும். இவர்கள் மேதினத்தை களியாட்ட ஓய்வுக்கான நிகழ்வாக கொண்டாடப்பட வேண்டும் என வற்புறுத்தினர். அத்துடன் கூட்டங்கள் சர்வதேச நட்புறவையும் நலன் விசாரிப்பையும் மையப்படுத்த வேண்டும் என வலியுறுத்தினர்.

**போர்க்காலத்தில் மேதினம் :-**

1915ல் போலியான சோசலிச பற்றாளர்களின் முகத்திரைகள் கிழியத் தொடங்கின. ஜேர்மனியில் தொழிலாளர்கள் மே முதலாம் திகதியும் தவறாமல் வேலை செய்யும்படி சோசலிச வாதிகளால் கேட்டுக் கொள்ளப்பட்டனர். இதே வேளை பிரான்சிய சோசலிச வாதிகள் அரசாங்க அதிகாரிகளிடம் மேதினத்தன்று தொழிலாளிகள் வேலை செய்வார்கள் அது குறித்து கவலைப்பட வேண்டாம் என உறுதி அளித்தனர். இதேபோன்ற செயற்பாடுகளை பல உலக நாடுகளில் காணக்கூடியதாய் இருந்தது. ஆனால் இக்கட்டான போர்ச்சூழலிலும் ரஷ்ய போல்ஸ்விக்குகள் வழமை போல மேதினத்தை கொண்டாடினர். இதேவேளை லெனின், லுக்சம்பேக் (Luxemburg) லேபகனாற் (Libernechy) போன்றவர்களின் குரல்கள் திரிபு வாதிகளுக்கு எதிராக ஓங்கி ஒலித்தன. 1916 மேதினமானது பல நாடுகளில் தொழிலாளர்கள் பழைமையான தலைமைத்துவ செல்வாக்கில் இருந்து தங்களை விடுவித்து கொள்வதை தெளிவாக காட்டியது. இதேவேளை யுத்தம் பிரகடனப்பட்டிருந்த போதும் தொழிலாளர் கட்சியின் வலியுறுத்தலின் விளைவால் ஐக்கிய அமெரிக்காவில் மேதினம் நிறுத்தப்படாமல் நடைபெற்றது.

சு. [illegible]

**முடிவுரை :-**

இவ்வாறு தோற்றம் பெற்று வளர்ந்த மேதினமானது இன்றும் பல்வேறு போராட்டங்களை வேண்டி நிற்கிறது. உலகமயமாக்கல், நவ கொலனித்துவம் அமெரிக்க ஏகாதிபத்தியம் எனப்பல கொடிய கைகள் எம்கழுத்தை நெரிக்கின்றன. இறுதியாய்.

"மேதினமானது முதலாளித்துவ வாதிகள் மனதில் பயத்தை உருவாக்கும் ஒரு தினமாகவும் உழைக்கும் மக்களின் மனங்களில் நம்பிக்கை விதைக்கும் தினமாகவும் இருக்கிறது. உலகத் தொழிலாளர்கள் கம்யூனிஸ்ட் இயக்கங்கள் இப்பொழுது வலுவடைந்து வருவதை அவதானிக்க முடியும். மிகப்பெரிய சாதனைகளுக்கும் வெற்றிகளுக்குமான பாதை மிகத் தெளிவாக தெரிகிறது. உலகின் எதிர்காலம் கம்யூனிசத்தின் கைகளிலேயே உள்ளது".

(1923 மேதினத்திற்காக C.E.Ruthenberg)

●








மாலை ஐந்து மணி. பகல் ஒரு மணிக்குத் தொடங்கிய கூட்டம் இன்னும் முடியவில்லை தலவாக்கலை நகரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தீவிரமாகிக் கொண்டிருந்தன.

"மேல் கொத்மலைத் திட்டத்தை கடைசிவரை எதிர்ப்போம்"

"மலையகத் தமிழ் மக்களைக் கூறு போடாதே"

"எங்கள் வாழ்க்கையை திட்டமிட்டு அழிக்காதே"

கோஷங்கள் பெரிதாகக் கேட்டன. பொலிஸ் படையொன்று அடிதடி, கண்ணீர்ப் புகை எதற்கும் தயாராக நின்று கொண்டிருந்தது. எதிர்ப்பு அமைப்புக்குழுவின் தலைவர் சுப்பிரமணியம் நன்றியுரை கூறிய பின்னர், கலந்து கொண்டவர்கள் மெல்லக் கலைந்து சென்றனர்.

* * * * * *

கூட்டத்தில் கலந்துகொண்ட இராமசாமியும், சுந்தரமும் ஆற்றோரமாக நடந்து, தேயிலைச் செடிகளுக்கூடாக ஒற்றையடிப் பாதையில் ஏறி, தமது தோட்டத்தை நோக்கி நகர்ந்தார்கள்.

"இராமசாமி, நீ நெனக்கிறியா, இந்தத் திட்டம் நம்மாளுகளுக்கு தீமையாவா ஆகப்போகுது?"

நீண்டநேர யோசனையின் பின் சுந்தரத்தின் கேள்விக்கு பதில் சொன்னான் இராமசாமி. "மேலோட்டமாப் பாத்தா நமக்கு தீமை மாதிரி தெரியில. ஆனா இந்தத் திட்டம் செய்யத் தொடங்கினா, தலவாக்கலை, லிந்துலை பகுதித் தோட்டமெல்லாம் காணாமப் போயிரும். அதவிட நம்மாளுக செதறிப் போயிருவாய்ங்க. இந்தத் திட்டத்தில் வேல செய்யிறதுக்கு புது ஆளுக வந்து குடியேறுவாய்ங்க. புதுப்புது கொலனி எல்லாம் வந்துரும்"

இராமசாமியின் பதில் சுந்தரத்திற்குத் திருப்தி தரவில்லை.

"சரி, இதெல்லாம் ஏன் நம்மவுட்டு கற்பனையா இருக்கப்படாது? இதினால நாட்டுக்கு புது மின் நிலையம் வரும். நம்ம மலைநாட்டுப் பகுதியெல்லாம் அபிவிருத்தி அடையும்னு நெனக்கப்பிடாதா?"

இராமசாமி சிரித்தான்.

'நெனச்சுக்கிட்டுப்போ, யாரு வேணாங்கிறது? இதுக்கு முன்ன நடந்தத வச்சுத்தானே நம்ம யோசிக்கிறோம். மகாவலித்திட்டம் நடந்தப்பவும், தெல்தெனிய திட்டத்திலயும் தோட்டத்து ஆளுக எப்படி சிதறிப் போனாய்ங்க. அவிங்களுக்கு இருக்க எடம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெடச்சுச்சா? நட்டஈடு கெடச்சுச்சா? இல்ல இதப்பத்தி எவனாச்சும் பேசுனானா?"

சுந்தரம் மௌனமாக இருந்தான்.

ஸ்டோரைத் தாண்டியதும் அவரவர் லயங்களுக்குப் பிரிந்து சென்றனர்.

* * * * * *

தூரத்தில் டெவன் நீர்வீழ்ச்சியின் 'ஹோ' என்ற சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. பசுமையான தோட்டங்களுக்கிடையே அது கூடிவந்து நீர்வீழ்ச்சியாக விழுகின்ற அழகை எத்தனை முறை வேண்டுமானாலும் ரசிக்கலாம்.

சுந்தரம், இராமசாமி அவர்களது நண்பர்கள் எல்லோரும் இந்தத் தோட்டத்திலேயே பிறந்து வளர்ந்தவர்கள். இந்த ஆறு, புல்லுமலை எல்லாம் அவர்களது உணர்வோடு ஒன்றிப் போனவை. நீரிலும், மேடுபள்ளங்களிலும் ஓடி விளையாடியே அவர்களது இளமை கழிந்தது.

தோட்டத்தில் பதிந்து தொழிலாளி களானவுடன் வாழ்க்கை ஒரே வட்டத்தில் சுழலத் தொடங்கியது. அதிக உறுப்பினர் கள் உள்ள பெரிய சங்கத்தில் சேர்ந்து தலைவரையும், மாவட்ட தலைவர் களையும் புகழ் பாடியே அவர்களது வாழ்வின் பெரும் பகுதி கழிந்தது.

சில ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட புதிய சங்கத்தில் பெரும்பாலான தோட்ட மக்கள் சேர்ந்தபோது சுந்தரம், இராமசாமி போன்றோரும் சேர்ந்து கொண்டனர். தொழிற்சங்க உறுப்புரிமையில் மாற்றமே தவிர, லயத்து வாழ்க்கையில் எந்த மாற்றமும் இல்லை. புதிய சங்கம் ஏற்பாடு செய்த கூட்டந்தான் இன்று நடந்தது.

* * * * * *

லயக்காம்பராவுக்குள் சுந்தரம் நுழைந்தவுடன் அவனது மகன் ரமேஷ்குமார் நையாண்டிக்குரலுடன் வரவேற்றான்.

"வாப்பா, எதிர்ப்பு கோஷம் போட்டு, கொத்மலைதிட்டத்த நிப்பாட்டி புட்டீங்களோ?" "மூடுறா வாயை, இப்ப நாங்க எதுக்காட்டி நீ பிச்சைதான் எடுப்ப" என்று கோபத்துடன் கத்தினான் சுந்தரம். இவர்களது வாக்குவாதத்தை தடுத்த சுந்தரத்தின் மனைவி வள்ளி, "சரி, சரி சாப்பிட்டு படுங்க, இரண்டு பேருக்கும் ஆவாதே" என்றாள்.

உயர்தர வகுப்பில் படிக்கும் ரமேஷ்குமார், நாட்டு நடப்பை ஓரளவு புரிந்து வைத்திருப்பவன்: இத்தகைய எதிர்ப்புக் கோஷங்கள் பயனளிக்கப் போவதில்லை என்பதே அவனது எண்ணம். மலையக மாணவர்களுக கென்றே வெளிநாட்டு உதவியுடன் அமைக்கப்பட்ட ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரிக்கு நடந்த 'கதி' அவனுக்குத் தெரியும். தந்தையைப் பற்றிய அநுதாபமான நினைவுகளோடு அவனது இரவு கழிந்தது.

* * * * * *

பனி சுரீர் என்று குத்தும் காலைப் பொழுது. விடிந்தும் விடியாத இரண்டும் கெட்ட நிலை.

சுந்தரம், வழமைபோலவே மலைக்குப் போக தயாராகிக் கொண்டிருந்தான். இன்று எட்டாம் நம்பரில் கவ்வாத்து. ரமேஷ் அவனிடமிருந்த ஒரே ஒரு வெள்ளைச் சீருடையணிந்தவாறு பாடசாலைக்கு போகத் தயாராகினான்.

கொத்மலை நீர்த்தேக்க விஷயத்தை இராமசாமியுடன் கதைக்க வேண்டும் என்ற நினைப்புடன் காம்பராவை விட்டு வெளியேறினான் சுந்தரம்.

நேற்றைய ஊர்வலம் தொடர்பாக பாடசாலை ஆசிரியருடன் விவாதிக்க வேண்டும் என்ற எண்ணம், ரமேஷ்க்கு மலையக மக்கள் பொது விடயங்களில் பல பரம்பரையாகவே அக்கறையுடன் ஈடுபட்டு வந்துள்ளனர். தொழிற்சங்கத் தலைமைகள் சொன்ன வார்த்தைக்கு கட்டுபட்டு நடத்திய ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டங்கள் எத்தனை? புல்மேய்ந்த மாடு மீண்டும் அதே பட்டியில் வந்து சேர்வது போல மாலையானதும் லயன் வந்து சேர்ந்து விடும் மக்கள்.

ரமேஷ் ஒற்றையடிப் பாதை வழியே நடந்து பாடசாலை நோக்கி புறப்பட்டான். நகரை அண்மித்ததும் நீர்வீழ்ச்சி ஓசையையும் மீறிக்கொண்டு கோஷங்கள் கேட்டன.

நகர் முழுதும் பெருங்கூட்டம்.

"கொத்மலை திட்டத்தை எப்படியாவது நடத்தியே தீருவோம்;"

"அபிவிருத்தியைத் தடுக்காதே"

என்றவாறு நேற்றைய கூட்டத்துக்கு எதிரான கோஷங்களோடு இன்று ஆர்ப்பாட்டம் நடக்கின்றது. தோட்டத் தொழிலாளர்களும் நிறையவே கலந்து கொண்டிருந்தனர்.

ரமேஷ்க்கு வியப்பாகவும், வேதனையாகவும் இருந்தது.

நேற்று எதிர்ப்பு; இன்று ஆதரவு! வேறு வேறு தலைமைகள்,

ரமேஷ், தந்தையையும் அவரது நண்பர்களையும் அநுதாபத்தோடு நினைத்துப் பார்த்தான்.

பாடசாலை மணி ஒலித்தது. அவனது நினைவுகள் கலைந்தன.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகர்வலம்

**நேர்காணல்**

இம்மாதம் இதழிற்கு யாரைப் பேட்டி காணலாம் என்று சிந்தித்துக் கொண்டிருந்தபோது ஓர் யோசனை தோன்றியது. இம்முறை சற்று வித்தியாசமாக எங்களுடையை மக்களை பேட்டிகண்டால் என்ன? யோசனையை செயற்படுத்தினோம். பயில் நிலம் குழுவினருடன் சீரும் சிங்காரமும் மிக்க கொழும்பு மாநகரைச் சுற்றி வந்தோம். பல அடுக்குமாடிக்கட்டிடங்கள், பல வர்ணவிளக்குகள் பீட்ஷா ஹட்கள், மக்டொனால்ட்கள், MCக்களும் கண்டு இலங்கை முன்னேறிவிட்டது. மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாகவும், உல்லாசமாகவும், செல்வச் செழிப்போடும் இருக்கின்றனர் என்று பேசிக் கொண்டோம். திடீரென்று கால் இடறியது. சற்றே குனிந்து பார்த்தோம். அங்கு நாங்கள் கண்டதுவோ வேறு உலகம். இந்தச் சிருங்கார நகரத்தின் சாதாரண மக்களது வாழ்வு எப்படி இருக்கின்றது. இதோ அவர்களே கூறுகின்றார்கள். உங்களை அவர்களிடம் அழைத்துச் செல்கின்றோம்.

கொழும்பின் வர்த்தகமையமான புறக்கோட்டையின் நெரிசல் மிகுந்த வீதியின் ஊடாகச் சென்று கொண்டிருந்தோம். இடையில் ஒரு சிறு சந்தினுள்ளே நுழைந்தோம். உள்ளே ஒரு மிகப்பெரிய மரக்கறி சந்தை மும்முரமாக இயங்கிக்கொண்டிருந்தது. சிறுசிறு கொட்டல்களை அமைத்து வியாபாரம் செய்து கொண்டிருந்தார்கள். பொலித்தின்களால் கூரை அமைத்திருந்தார்கள். மழைகாலமாகையால் தரையில் சேறு நிரம்பி இருந்தது. எவரும் அதைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. அங்கே மரக்கறி வியாபாரம் செய்துவரும் சுகத்தை சந்தித்தோம். பரஸ்பரம் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டோம். நாங்கள் வந்த விபரத்தைக் கூறியதும் மகிழ்ச்சியாக ஒத்துக்கொண்டார்.



**வியாபாரம் எப்படிப் போகின்றது? வாழ்க்கைச் செலவை சமாளிக்கக் கூடியதாக இருக்கின்றதா?**

அது சரியான சிரமமாகத்தான் இருக்கிறது. என்னிடம் இரண்டு பேர் வேலைபார்க்கிறார்கள். அவர்களுக்கு கூலி, இடத்துக்கான வாடகை கொடுத்து முடிய ரூ500 தான் மிஞ்சுகிறது. எனக்குத் திருமணமாகி இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள். மிஞ்சும் இந்தப்பணத்தில்தான் என் வாழ்க்கைச் செலவுகளை சமாளிக்கிறேன். ஒருநாள் உழைப்பது ஒருநாள் செலவிற்கே சரியாகிவிடுகின்றது. குழந்தைகள் வளர்ந்து விட்டால் இன்னும் சிரமம்தான்.

**எப்படி இந்தத் தொழிலைத் தேர்ந்தெடுத்தீர்கள்?**

என் சகோதரர்கள் இருவரும் இங்குதான் வேலை செய்கிறார்கள் நானும் 15 வருடங்களாக இந்தத் தொழில் செய்து வருகிறேன்.

**வியாபரத்திற்கு எங்கிருந்து பொருள் கொண்டு வருகிறீர்கள்? இதில் நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்?**

நுவரெலியா போன்ற இடங்களிலிருந்து மரக்கறி கொண்டு வருகிறோம்.





ஒவ்வொருநாளும் புது மரக்கறிகளைத்தான் விற்கின்றோம். சில சமயங்களில் நாள் கடந்து விட்டால் மரக்கறிகள் பழுதடைந்து, நான் நஷ்டமடைகின்ற சந்தர்ப்பங்களும் இருக்கின்றது. ஒவ்வொரு காலத்திற்கும் ஒவ்வொரு வகையிலான மரக்கறிகள் அதிகம் விளையும். அந்தக்காலத்தில் அந்த மரக்கறியின் விலையும் குறைவாகக் காணப்படும். மேலும் இங்கு கடைகளுக்கு வசதி குறைவு. மழைக்காலங்களில் இங்கு இருக்க முடியாது. நீங்களே பாருங்கள். நிலம் முழுக்க சேறாக இருக்கின்றது. சிலசமயங்களில் இதைவிடவும் மோசமாக இருக்கும். அந்தச் சமயங்களில் மரக்கறி வாங்க யாரும் வரமாட்டார்கள் ●

நாங்கள் சுகத்திடம் இருந்து விடைபெற்று. அங்கிருந்து சற்று விலகி புறக் கோட்டையின் மற்றுமொரு பகுதிக்கு வந்தோம். அங்கு நாங்கள் மூட்டை சுமக்கும் தொழிலாளிகளைச் சந்தித்தோம். அங்கே இவர்களை நாட்டாமை என்று அழைக்கிறார்கள். தனி ஒருவரே 2,3 மூடைகளை ஒரேயடியாக சுமந்து சென்றார்கள். சிலர் வண்டியில் ஒன்றில் 20,30 மூடைகளை வைத்து இழுத்துக் கொண்டு செல்கின்றார்கள். அவையெல்லாம் சாதாரண மனிதர்களால் சுமக்கக் கூடிய பாரமாக எமக்குத் தோன்றவில்லை. அங்கு 58வயது இளைஞராக சித்திகைத் சந்தித்தோம். அவருடைய உடம்பு இன்னமும் கட்டுமஸ்தாக இருந்தது. அவரோடு பேசியதிலிருந்து,

**எப்படி இந்தத் தொழிலுக்கு வந்தீர்கள்?**

18வது வயதிலேயே படிப்பை விட்டுவிட்டேன். குடும்பச் சூழல் காரணமாக இந்த வேலைக்கு வந்துவிட்டேன்

**உங்களுடைய வருமானம் மூலம் குடும்பச் செலவுகளை சமப்படுத்தக்கூடியதாக இருக்கின்றதா?**

சரியான கஷ்டம். மாதாமாதம் ரூ 2000,3000 கடன்பட்டுதான் வாழ்க்கை நகர்கிறது. எனக்கு 6 பிள்ளைகள் மூன்று பிள்ளைகள் வேலை செய்கிறார்கள். மூவர் படிக்கிறார்கள். வேலை செய்பவர்கள் மூவரும் திருமணம் முடித்துவிட்டதால், அவர்களுக்கும் குடும்பம் என்றாகி விட்டது. அதனால் அவர்களிடம் இருந்து எதையும் எதிர்பார்க்க முடியாது. எனவே என் குடும்பத்தை நானே பார்த்துக் கொள்கின்றேன்.



**இப்பொழுது நீங்கள் இத்தொழிலில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்ன?**

தொழில் குறைவு. முன்னர் 200,300 பேர் இருந்தோம். இப்போது 1000 பேருக்கு மேல் இருக்கின்றார்கள். முன்னர் நாளுக்கு ரூ800-900 சம்பாதிப்போம். இன்றைக்கு ரூ150 சம்பாதிப்பதற்குள் போதும் போதும் என்றாகிவிடுகிறது. அத்துடன் சில நாட்களில் அதுவும் கிடைப்பதில்லை. எங்களுக்கு அடிக்கடி கால்கள் வீங்கி விடும். உடம்பில் மரணவலி எடுக்கும். இப்போது எனக்கும் வயதாகி விட்டது. என்னால் பழையமாதிரி வேலை செய்ய முடிவதில்லை. அடிக்கடி படுக்கையில் விழுந்து விடுகிறேன் ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து மட்டக் குளிக்கு சென்றோம். நீங்கள் நினைத்தது சரி. அங்கே 155 பஸ் ஓட்டுனர் ஒருவரையும் நடத்துனரையும் சந்தித்து உரையாடினோம்.

அங்கே பஸ் ஓட்டுனரான தர்மலிங்கம் என்பவரை சந்தித்தோம். வயது 28.

**நீங்கள் ஓட்டுனரான கதை என்ன?**

9ஆம் வகுப்பு வரைக்குந்தான் படித்தேன். அதுக்கு மேல் படிக்கவில்லை. ஊரில் சில காலம் தேயிலை தொழிற்சாலையில் வேலை பார்த்தேன். பின்னர் கொழும்புக்கு வந்து சில காலம் பஸ் நடத்துனராக வேலை செய்தேன். அப்படியே இப்பொழுது நான்கு வருடங்களாக ட்ரைவராக வேலை செய்கிறேன்.





**தொழில் சுமுகமாகப் போகின்றதா? நீங்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள்?**

அப்படியென்று சொல்ல முடியாது. எங்களிற்கு முக்கியமாக இரண்டு பிரச்சினைகள் தான். ஒன்று பொலிஸார் அடிக்கடி வீதி விதிமுறைகளை மாற்றி விடுவார்கள். அதனால் தண்டப்பணம் கட்டவேண்டிவரும். எப்படியும் மாதத்திற்கு ரூ 10000 இதற்கே சென்று விடுகிறது. (சற்று குரலைத்தாழ்த்தி) அதைவிட பெரிய பிரச்சனை இங்கு கப்பம் வாங்குகின்ற சண்டியர்கள். மாதத்திற்கு ஒருமுறை அவர்களுக்கும் ஒரு கணக்கு சென்று விடுகிறது. அடிக்கடி அதிகரிக்கும் பெற்றோல் விலையும் எமக்கு பெரும் பிரச்சினையாக இருக்கிறது. பஸ் கட்டணங்களை அதிகரிக்க முடியாது போனால், பெற்றோல் செலவுகளையும் கவனித்து, மற்றைய செலவுகளையும் கவனித்து, பஸ் உரிமையாளருக்கும் கொடுத்து எமக்கு மிஞ்சுவது கொஞ்சம்தான். மேலும் நீண்ட நேரம் ஒரே இடத்தில் இருந்து வாகனம் ஓட்டுவதால் மூலநோய், உடம்பு தளர்ச்சி, நாரிப்பிடிப்பு போன்ற வியாதிகள் ஏற்படுகின்றன நாங்கள் மூன்று மணிக்கு எழும்பினோம் என்றால் இரவு நிததிரைக்குச் செல்ல 10,11 ஆகிறது. போதிய ஓய்வில்லாமல் உழைக்க வேண்டி இருக்கின்றது.

அவரிற்கு அருகிலேயே பஸ் நடத்துநர் ரவியும் இருந்தார். அவருடன் உரையாடியபோது,

**எப்படி இந்தத் தொழிலைத் தேர்ந்தெடுத்தீர்கள்?**

எனக்கு அம்மா,அப்பா கிடையாது. என்னை எடுத்து வளர்த்தது எல்லாம் இப்போது நான் வேலை செய்யும் பஸ்ஸின் உரிமையாளர்தான். நானும் பல கடைகளில் சென்று வேலை செய்தேன். பிறகு இங்கே வந்து 2 வருடங்கள் வேலை பார்க்கிறேன்.



**உழைக்கின்ற வருமானம் போதுமானதாக இருக்கின்றதா?**

நான் தனியாள் என்பதால் எந்தப்பிரச்சினையும் இல்லை. இருந்தாலும் கிடைப்பது எல்லாம் செலவுக்கே சரியாக இருக்கிறது. சேர்த்து வைப்பதற்கு ஒன்றும் மிச்சம் இருப்பதில்லை.

**பஸ் நடத்துனர் என்ற வகையில் பல்வேறு சிரமங்களிற்கும் நீங்கள் முகம் கொடுக்க வேண்டியிருக்கும் இல்லையா?**

உண்மைதான். பஸ் கூட்டமாக இருக்கும்போது, அவர்களைச் சமாளிப்பது சரியான கஷ்டம். ஒவ்வொருத்தரும் ஒவ்வொருமாதிரியானவர்கள். வேறு வேறு மொழி பேசுபவர்கள். வெட்கத்தை விட்டுச் சொல்வதானால், சில சமயங்களில் அவர்களிடம் அடியும் வாங்கியிருக்கின்றேன். என்ன செய்ய காலையில் இருந்து இரவுவரை நின்றபடியும், நடத்தபடியும், தொங்கியபடியும் ஓடும் பஸ்ஸில் தொழில் செய்கிறோம். மத்தியான வெயில் நேரங்களில் பஸ் கூட்டமாக இருக்கும். சிறிது நேரம் பிரயாணம் செய்யும் உங்களிற்கே இவ்வளவு களைப்பாக இருந்தால், நாள் முழுவதும் பஸ்சுடனேயே வாழும் எங்கள் நிலைமையை சிந்தித்துப்பாருங்கள். நாங்களும் மனிதர்கள். எங்களை மரியாதையாக நடத்துங்கள். (அதைக் கூறும் போது அவர் சற்று உணர்ச்சி வசப்பட்டார். நாங்களும் பேச்சை மாற்றவிரும்பி)

**தங்களுடைய 155 பஸ் சேவை மெதுவான சேவைக்கு கொழும்பு முழுவதும் பிரபலம். இதற்கு என்ன காரணம்?**

(இருவரும் சிரிக்கின்றனர். பஸ் ஓட்டுனர் தர்மலிங்கம் பதிலளிக்கையில்) அதில் உண்மை இருந்தாலும் இந்த வினாவிற்கு நான் முதலிலேயே பதில் கூறிவிட்டேன். எங்கள் பஸ் செலவுகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இதனால் நாங்கள் ஒவ்வொரு பயணத்திற்கும், குறிப்பிட்ட அளவு தொகை பணம் சேர்க்க வேண்டும். இல்லையென்றால் நஷ்டம்தான். அதனால்த்தான்தவிர்க்க இயலாதபடி இது நிகழ்கின்றது. ஆனால் நாங்கள் குறிப்பிட்ட தரிப்பிடங்களில் மாத்திரம் தான் சற்று அதிக நேரம் பஸ்ஸை நிறுத்தி வைக்கின்றோம். ●

தனியார் மயமாக்கலின் விளைவுகளை நொந்தவாறே அவர்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டோம். அங்கிருந்து சற்றுத் தொலைவில் புறப்படவிருக்கும் பஸ்ஸில் ஏறத்தயாராய் இருந்த பஸ் பாடகர் விஜயசூரியவைச் சந்தித்தோம். 60,70 வயது மதிக்கதக்கதாக இருந்தார். எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டோம். அவரும் சந்தோஷமாகச் சம்மதித்தார். அவர் தான் பஸ் பாடகரான கதையை எம்மிடம் சொன்னார்:-

"நான் நீண்ட காலமாக IC RC யில் (சர்வதேச செஞ்சிலுவை சங்கம்) வேலை பார்த்தேன். அப்போது என் தாயார் மாடியில் இருந்து கீழே விழுந்து இறக்க என் மனைவிதான் தள்ளியதாக, பொலிஸ் பிடித்துக் கொண்டு போய்விட்டது. ஆனால் என் மனைவி அப்படிச் செய்யவில்லை. பிறகு எனக்குச் சொந்தமாக இருந்த வீட்டை விற்று என்மனைவியை வெளியே கொண்டு வந்தேன். எங்களுக்கு பிள்ளைகள் இல்லை. என் சகோதரர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2பேர் அரச சேவையில் இருக்கிறார்கள். அவர்களால் எனக்கு எந்த உதவியும் இல்லை. நான் 3வருடமாக இந்த தொழில் செய்து வருகிறேன். காலை 8மணியிலிருந்து இரவு 8 மணிவரை வேலை செய்கிறேன். ஒரு நாளைக்கு 40,45 பஸ்கள் ஏறி இறங்குகின்றேன். வயதாகிவிட்டது. கொஞ்சம் சிரமமாகத்தான் இருக்கிறது. சில சமயங்களில் சில பஸ்காரர்கள் திட்டவும் செய்வார்கள். ஆனால் அவற்றை மனதிற்குள் எடுத்துக் கொள்வதில்லை. ஆனால் அனேகமான பஸ் ஓட்டுனர்கள், நடத்துனர்கள் இருவரும் என் வயதிற்கு நல்ல மரியாதை தருகிறார்கள்.

பயணிகளும் நான் நல்ல பழைய பாடல்களைப் பாடுவதால் விரும்பிக்கேட்டு ரசிக்கிறார்கள். மேலும் எனக்கு வீட்டுக் கூலி, எங்கள் இருவருக்கும் சாப்பாட்டுச் செலவு தவிர மனைவி ஒரு நோயாளி. அவருக்கு மருந்துத் தேவைக்கும் சிறிது செலவாகும். மற்றப்படி எந்த செலவும் இல்லை. தனியார் வங்கி ஒன்றில் பணம் சேமித்து வருகின்றேன். ஒரு நாளைக்கு ரூ700 முதல் 800 வரை சம்பாதிக்கின்றேன்".

இவர் தங்களை பஸ் பிச்சைக்காரர் என்று சொல்வதை எதிர்க்கிறார். நாங்கள் ஏழைக் கலைஞர்கள். அரங்கேற முடியாதவர்கள். அதனால் பஸ்ஸில் பாடுகிறோம் என்கின்றார் சூடாக. அத்துடன் இப்பொழுது தொடர்ந்து பாடல்கள் பாடுவதால் தன்குரல் பழைய வசீகரத்தை இழந்துவிட்டதாக கூறிக் கவலைப்பட்டார். பின்னர் அவர் நாம் ஏறிய பஸ்ஸிலேயே ஏறினார். தன் கணீரென்ற குரலால் பாடல்களை தன் கையில் இருக்கும் ரபானை அடித்தவாறே பாடத் தொடங்கினார். 155 பஸ்சும் வழமை போலவே ஆமை வேகத்தில் தன் பயணத்தை ஆரம்பித்தது. ●


தொடர்ந்து நாங்கள் மயூராபிளேஸ் (றெதிமோல) ஆட்டோ நிறுத்துமிடத்தில் ஆட்டோ சாரதி S. நடராசாவை சந்தித்தோம். அவருடனான சந்திப்பு முக்கியமானது.

**நீங்கள் எப்படி ஆட்டோ சாரதியானீர்கள்?**

1980களுக்கு முன்னால் எமது பிரதேசத்தில் இயங்கிவந்த நெசவு ஆலையில் வேலை பார்த்தேன். நெசவு ஆலை மூடியதும் சவுதி அரேபியாவுக்கு சென்று சம்பாதித்த பணத்தைக் கொண்டு ஆட்டோ வாங்கி ஓட்டி வருகிறேன்.

**வாழ்க்கை சுமுகமாகச் செல்கிறதா?**

நான் 15 வருடங்களுக்கு மேலாக ஆட்டோ ஓட்டிவருகிறேன். ஆரம்பகாலத்தில் நல்ல வருமானம் கிடைத்தது. அந்தக் காலத்தில் ஆட்கள் கையில் நிறைய காசு இருந்தது. பெற்றோல் விலையும் குறைவு. அத்தோடு ஆட்டோக்களும் குறைவு. இப்போது ஆட்கள் கையில் காசும் இல்லை. பெற்றோல் விலையும் அதிகம். அதனால் யாரும் ஆட்டோவில் ஏறுவதில்லை அவசரத்திற்கு மட்டும்தான் ஏறுகிறார்கள். ஆட்டோக்கள் அதிகம் இருப்பதால் நிறைய வருமானம் கிடைப்பதும் இல்லை.



**அப்படியென்றால் வாழ்க்கைச் செலவுகளை எப்படி சமாளிக்கின்றீர்கள்?**

என்னைப் பொறுத்த வரையில் மனைவி மற்றும் மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள்.



மூன்று பிள்ளைகளும் படித்துக் கொண்டிருக்கிறார்கள். வாழ்க்கைச் செலவில் கல்விக்கான செலவு இன்று அதிகம். அதனால் ஒரு நாளைக்கு சம்பாதிக்கும் ரூ300 அல்லது 400ஐ வைத்து வாழ்ககையை நடத்துவது சரியான கஷ்டம். இந்த மாதம் கடன் வாங்குவதும் காசு கிடைத்ததும் கடனை அடைப்பதும், பிறகு மீண்டும் கடன் வாங்குவதும். இப்படித் தான் என்னோடு ஆட்டோ ஓட்டும் எல்லோரும். அதிலும் சிலர் வேறு ஆட்களின் ஆட்டோ வாங்கி ஓட்டுகிறார்கள். அவர்களுக்கு ஒரு நாளில் கிடைக்கும் வருமானம் மிகக்குறைவு. அவர்களுக்கு வீட்டுச் செலவுக்கு பணம் கொடுப்பது மிகச் சிரமம். இப்படியே போனால் என்னைப் போன்ற ஆட்டோ ஓட்டுபவர்கள் நடுறோட்டுக்கு வரவேண்டியதுதான். சம்பாதிக்கிற பணம் செலவுக்கு மட்டும்தான் போதுமாயிருக்கிறது சேர்த்துவைக்க முடியாது. மூன்று பெண் பிள்ளைகள். அவர்களுடைய கல்யாணத்துக்கும் சேர்த்து வைக்க வேண்டும்.

அதைவிட பெரிய பிரச்சினை நாங்கள் இருக்கும் வீடு. அது 1921ல் கட்டியது. நாங்கள் இருப்பது நெசவு ஆலையில் வேலை செய்பவர்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்ட அடுக்கு மாடி வீட்டில். அது இப்போது இடிந்து விழும் நிலையில் இருக்கிறது. நெசவு ஆலை மூடியபிறகு இப்போது அந்த இடத்தை சிங்கப்பூர் நிறுவனத்துக்கு விற்றிருக்கிறார்கள். அங்கே இப்போது பெரிய வீடமைப்புத்திட்டம் ஒன்றினை அமைக்கப் போகிறார்கள். சில நாட்களுக்கு முன் அஸ்திவாரம் அமைப்பதற்காக ஆழமாகநிலத்தை கிண்டியபோது எமது வீடுகள் அதிரத் தொடங்கிவிட்டன. பின்னர் நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து வீதியில் இறங்கி பிரச்சினைப்பட்டு இப்போது அந்த கட்டிட வேலைகளை நிறுத்தி வைத்துள்ளோம். எங்களுக்கு வேறிடத்தில் வீடமைத்துத் தருவதாக அவர்கள் கூறுகிறார்கள். எங்களுக்கு அது சரிவராது. நாங்கள் மூன்று நான்கு தலைமுறையாக என்று 70,80 வருடங்களாக இங்கே வாழ்ந்துவருகிறோம். எல்லா மதம், இனத்தை சேர்ந்தவர்களும் சேர்ந்திருக்கிறோம். எல்லா மத கோவில்களும் அருகருகே அமைந்திருக்கின்றன. இப்படி ஓர் இடத்தை நீங்கள் வேறெங்கும் கண்டிருக்க முடியாது. ●

(நாங்கள் நடராசாவிடமிருந்து விடைபெற்றோம். அவர் கூறிய அந்த நெசவு ஆலைக்கு நிகழ்ந்தது என்ன? ஏன் அது மூடப்பட்டது? இப்படி அடுக்கடுக்காய் பல கேள்விகள் மனதில் எழுந்தன. விடைதெரியாமல் கேள்விகள் மட்டும் மனதில் அலைந்து திரிந்து கொண்டிருந்தன. அந்த சமயத்தில் எங்களிற்கு ஒருவர் ஞாபகத்திற்கு வந்தார். பக்கம் 26ற்கு பயணப்படுங்கள். அவரைச் சந்திப்போம்.)

அடுத்ததாய் நாங்கள் சந்தித்தது ஒரு சுத்திகரிப்புத் தொழிலாளியை, அவரை அவரின் தொழில் நேரத்தில் சந்தித்ததால் அவரால் எங்களுக்கு போதிய அளவு நேரத்தை ஒதுக்கித்தர முடியவில்லை. அவரோடு பேசிய சிறிதளவு நேரத்திற்குள் அவர் கூறிய விடயங்கள் .

"வேறெந்தத் தொழிலும் கிடைக்கவில்லை. அதனால் இந்தத் தொழிலைத் தேர்ந்தெடுத்தேன். ஆரம்பத்தில் இந்தத் துர்நாற்றம் ஒரு பிரச்சினையாகத்தான் இருந்தது. பின்னர் இப்போது இதுவே பழகிவிட்டது. பெரிய கஷ்டமாகத் தெரியவில்லை. பலர் இந்தத் தொழிலைக் கேவலமாக நினைக்கிறார்கள். ஆனால் நான் இப்பொழுது அப்படி நினைக்கவில்லை. நாங்கள் மட்டும் இல்லையென்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நகர் முழுவதும் குப்பை மேடாய்த்தான் காட்சியளிக்கும்"

என்று கூறி விடைபெற்றுக்கொண்டார் விடைபெறும் போது தங்களையும் பேட்டி காணவேண்டும். என்ற எங்களின் நோக்கத்திற்கு தன்னுடைய வாழ்த்துக்களையும் நேரமொதுக்க முடியாமைக்கு தன்னுடைய மனவருத்தத்தையும் தெரிவித்துக்கொண்டார். ●



அவரிடமிருந்து நாம் விடைபெற்றபொழுது சூரியன் அனல் கக்கிக் கொண்டிருந்தான். தாகசாந்திக்காக இளநீர் வாங்கி அருந்தினோம். (எங்கள் பயில்நிலம் குழுவில் பல் பெப்சி, கொக்கக்கோலாக்கள் அருந்துவதை முற்றாகவே தவிர்த்து விட்டிருந்தோம்) புறப்படுவதற்குத் தயாராய் இருந்த பொழுதுதான் இந்தக் காட்சியைக் கண்டோம். அந்தக் கொழுத்தும் வெய்யிலில் ஒரு முதியவர் மூன்று சக்கர தள்ளுவண்டியில் இருந்து பிச்சை எடுத்துக் கொண்டிருந்தார். அவரை வைத்து ஒரு மூதாட்டி தள்ளிக்கொண்டு வந்தார். இருவரும் 60,70 வயது மதிக்கத்தக்கவர்களாய் இருந்தார்கள். ஆனால் அவர்களுடன் உரையாடியபோது 50 வயதினராய் இருந்தார்கள். காலம் அவர்களை முன்னதாகவே முதியவர்களாக்கி விட்டிருந்தது. அவர்களுடன் உரையாடியதில் இருந்து, J.A.P. குணவர்த்தன, வயது (52)

**நீங்கள் ஏன் பிச்சை எடுக்கின்ற நிலைக்குத் தள்ளப்பட்டீர்கள்?**

முன்னர் பஸ் ஓட்டிக்கொண்டிருந்தேன். ஒரு விபத்தில் கால் உடைந்து விட்டது. அதற்குப்பிறகு செலிங்கோவில் லலித் கொத்தலாவல, இந்த தள்ளுவண்டியை தந்தார். அப்படியே வாழ்க்கையையும் கவனிக்க வேண்டி இருந்தது. வேறெந்த வேலையும் கிடைக்கவில்லை. என்னுடைய உழைப்பால் வாழ்ந்த நான், மற்றவர்களை நம்பிப் பிழைக்க வேண்டியதாகப் போயிற்று. (முகம் இறுகியது. அப்படியே சிறிது நேரம் பேசாமல் இருந்துவிட்டார்.)

**உங்களிற்குப் பிள்ளைகள் யாரும் இல்லையா?**

ஒரு மகளும் ஒரு மகனும் இருந்தார்கள் மகள் திருமணம் செய்து சென்றுவிட்டாள். மகன் கூலி வேலை செய்கின்றான்.

**அவர்கள் உங்களைப் பார்த்துக் கொள்வதில்லையா?**

மகளிற்கு குடும்பத்தில் பிரச்சினை. அவள் எங்களைக் கவனிப்பதில்லை. மகன் குடிகாரனாகிவிட்டான். அவன் சம்பாதிப்பது அவனுக்கு குடிக்கவே சரியாக இருக்கிறது. இதில் எப்படி அவன் எங்களைக் கவனிப்பது. ஒருமுறை குடித்து விட்டு எங்களை அடிக்க வந்துவிட்டான். அதில் இருந்து அந்த வீட்டிலிருந்து நாங்கள் வெளியேறிவிட்டோம். இப்பொழுது எல்லாமே என் மனைவிதான். (பின்னால திரும்பி தன் மனைவியைப் பார்த்து சிரிக்கிறார்) ஒருநாளைக்கு ரூ100,150 வரை கிடைக்கிறது. எங்களுக்கென்று தேவைகள் பெரிதாக இல்லை என்பதால்





அதற்குள்ளாகவே எங்கள் செலவுகளைக் கவனித்து கொள்கிறோம்.

அவர் சொல்வதை எல்லாம் கேட்டுக் கொண்டு சின்னதாய் ஒரு சிரிப்புடன் இருந்த பிரித்திசோமா (வயது 50) அவர்களுடன் பேசத் தோன்றியது.

**இப்படி வெய்யிலில் இவரைத் தள்ளிச் செல்வது சிரமமாக இல்லையா?**

இல்லை. அவர்தான் எனக்கு எல்லாம். அவர் போகும் இடத்துக்குத்தான் நானும் போவேன். நாங்கள் காதலித்து கல்யாணம் செய்து கொண்டோம். இப்போது நாங்கள் திருமணம் முடித்து 30 வருடங்கள் ஆகிவிட்டது. இந்த வண்டியைத் தள்ளி என் கைகள் இரண்டும் காய்த்து விட்டது. கால்களும் அடிக்கடி வலிக்கும். இருந்தாலும் என் இதயம் செல்லும் இடத்துக்குத்தானே நானும் செல்லமுடியும். (இதைக் கூறுகின்ற பொழுது அவரின் முகம் வெட்கத்தில் சிவக்கின்றது)

●

**நரிகளுக்கு வளைகள் உண்டு வானத்துப் பறவைகளுக்கு கூடுகள் உண்டு. ஆனால் மனுசகுமாரனுக்குத் தங்குவதற்கோர் இடமில்லை.**

அந்தக் காதலர்களிடம் இருந்து நாங்கள் விடைபெற்றுக் கொண்டோம். அவர்களும் தங்கள் புன்னகையால் எங்களிற்கு விடை தந்தார்கள்.

நண்பர்களே நாங்கள இவ்வளவு நேரமும் நேர் கண்டவர்கள் எங்களோடு வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். அவர்கள் கதை எங்களில் பலரிற்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. வீதியில் கிடந்து குரலற்றவர்களின் குரலை பயில்நிலத்தில் பதிவு செய்ய முயற்சித்திருக்கின்றோம். இன்னும் பலரைக் காணவேண்டும். அவர்களோடு இன்னும் ஆறுதலாகப் பல விடயங்கள் பேசவேண்டும் என்று நினைத்திருநதோம். ஆனால் காலமும், பக்கமும் அதற்கு இடந்தரவில்லை எதிர்காலத்தில் அவற்றிற்கான முயற்சிகளை மேற்கொள்ளுவோம் மீண்டும் சந்திப்போம்.

●

விளிம்பு நிலைமக்கள் வேறு. தொழிலாள மக்கள் வேறு. பின்நவீனத்துவம் விளிம்புநிலை மக்களை முதன்மைப்படுத்துகிறது. அவர்களால் சமூகத்தில் மாற்றங்களை ஏற்படுத்த முடியாது. ஏற்படுத்த விரும்புவதில்லை. அவர்கள் முதலாளித்துவத்தின் உட்பிரசவிப்புகள்.

படப்பிடிப்பு:- ஜனமகன்

நேர்கண்டவர்கள்:- சே. ஆயன், ஜனகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரவதை



எதுவுமே மாறவில்லை
உடல் வேதனைக்காளாகக் கூடியது
அது உணவுண்டு சுவாசித்து உறங்கவேண்டும்
அது மெல்லிய தோலையும் அதற்கடியில் குருதியையும் கொண்டது
அது பற்களையும் விரல் நகங்களையும் போதியளவிற் கொண்டது
(அதனுடைய) எலும்புகள் முறிக்கக்கூடியன
(அதனுடைய) மூட்டுக்கள் விரிக்கக்கூடியன
சித்திரவதைகளில் இவை எல்லாம் கவனத்தில் கொள்ளப்படும்.

எதுவுமே மாறவில்லை
உரோம் நிறுவப்பட முன்னும் பின்னும்
கிறிஸ்துவுக்கு முன்னும் பின்னுமான 20ம் நூற்றாண்டுகளில்
நடுங்கியது போல உடல் இன்னமும் நடுங்குகிறது
சித்திரவதை மட்டும் இருந்த மாதிரியே இருக்கிறது
உலகம் தான் சுருங்கி விட்டது
நடப்பதெல்லாம் பக்கத்து அறையில் நடப்பது மாதிரி கேட்கிறது

எதுவுமே மாறவில்லை
மக்கள் தொகை பெருகி விட்டது என்பதைவிடப்
பழைய குற்றங்கட்கு அயலாகப் புதிய குற்றங்கள் முளைத்துள்ளன:
மெய்யானவை, கற்பனையானவை, தற்காலிகமானவை இல்லாதவை
ஆனால் இவற்றுக்கெல்லாம் உடலின் பதிலான ஓலம்
அன்றும் இன்றும் இனியும்
பழைய சுரவரிசைக்கும் சுருதிக்கும் இசைவான குற்றமறியாத ஓலம்.

எதுவுமே மாறவில்லை
நடத்தைகளையும் விழாக்களையும் நடனங்களையும் தவிர
தலையைப் பாதுகாக்கும் கவசமும் சைகையும் இன்னும் அவ்வாறே
உள்ளது
தள்ளுண்ணும்போது உடல் துடித்து நடுங்கிப் பற்றி இழுத்து
நிலத்தில் விழுகிறது
முழங்கால் உயர்ந்து, கன்றி வீங்கிச் சோர்ந்து குருதி வழியும்

எதுவுமே மாறவில்லை
ஆறுகளின் ஓட்டங்களையும் காடுகளினதும்
கரைகளதும் பாலைவனங்களதும் பனிமலைகளது அமைவுகளைத்
தவிர
சிறிய ஆன்மா நிலக்காட்சிகளின் ஊடே சுற்றி அலைந்து மறைந்து
மீண்டு நெருங்கி விலகிக் கட்டிக்கழித்துத் தனக்கே ஐக்கியமாகி
ஒருகணம் தனது இருப்பை அறிந்ததுபோல இன்னொருகணம்
அறியாததுபோல
எனினும் உடல் உள்ளது, உள்ளது, உள்ளது
அது செல்ல ஒரு இடமில்லை.

மூலம்: வில்லாவா ஸிம்போர்ஸ்கா
(Wislawa szymborska)
தமிழில்- சீராளன்



# சரித்திரம்

வென்றவன் சொன்ன வீர வரலாறுடன் - காலம்
புதியகதை கூறும்
தோற்றவன் துர்மரணம் எய்தியதாய்
சுடுகாட்டில் புதர் முளைக்கும்
புதைத்த மண்மேட்டில் - ஓர் பூமலரும்.

மீண்டும்,
மென்மலரின் இதழ் ஒன்று எரிக்கப்படும்
அதன் தேன் உறுஞ்சப்படும்
தாங்கிய காம்பும் வெட்டிச் - சாய்க்கப்படும்.. ..
ஆனால்,
காற்றில் கலந்த மகரந்தம் மட்டும்
கால இடைவெளிகள் உரமூட்ட
நன்னிலத்தில் ஆழவேர் பதிக்கும்..!

தளைத்தெழுந்து,
இயற்கையின் கோரமொதிக்கி,
நீர் இருந்தால் நிழல் தரவும்
மரணமுற்றால் விறகாகிடவும்
திடசங்கற்பம் பூண்டெழும்

காட்டு வழி நடந்தோரின்
கானகக் கதைகள் கேட்டு
காற்றுக்கு தலைசாய்க்கும் நாணல் நடுவே,
தனிமரமாய்க் கடுந்தவம் பூணும் - இது
கலையாது, அழுகாது.. .. ..
கடல் கொண்டு போகாது.. .. ..
காத்திருந்து நல்ல கதை கூறும்!!

இ.சபாரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# புழுதி படிந்த வெள்ளைப் பூக்கள்

விநோதா மூடியிருந்த கண்களை மெல்லத் திறந்து யன்னலூடாகப் பார்த்தாள். மங்கலான ஒளியில் மரங்களும் செடிகளும் அவள் கண்களுக்குள் கண்ணாமூச்சி ஆடின. லேசான குளிர் காற்றில் சாதுவாய் சிலிர்த்தது உடல். விநோதா தன் கட்டிலுக்கு எதிரே இருந்த மேசையில் மங்கல் ஒளியில் தெரிந்த நாட்காட்டி மேல் கண்களைத் திருப்பினாள். மார்கழி மாதம் 20ம் திகதி. சட்டென விநோதாவுக்கு ஞாபகம் வந்தது. இது அவள் வாழ்வில் மறக்க முடியாத நாள். அவசர அவசரமாய் எழுந்து குளித்து ஆடையணிந்து வெளியே செல்ல தயாராக முற்றத்தில் இறங்கினாள். அம்மாவின் குரல் அவளைத் தடுத்து நிறுத்தியது.



"விநோதா! விநோதா! இப்படி விடியுமுன்னால வெளிக்கிட்டு அவசரமாக எங்க வெளியில போறாய்? என்னட்டக்கூட சொல்லாம ஓடிப்போற அளவுக்கு அவசரமோ?" அம்மா கலவரமாய கேட்டாள்.

முற்றத்தில் நின்ற விநோதா அம்மாவைப் பார்த்து விட்டு ஒருமுறை குனிந்து தனது வலது முழங்காலுக்கு கீழே பொருத்தியிருந்த செயற்கை கால்களையும் பார்த்தாள். அவளுக்கு விரக்தியை விட, சிரிப்பே வந்தது.

"இந்தக் காலோட நான் என்ன ஓடியா போகப்போறன்? நடந்து தானே போகவேணும்" பெருமூச்சுடன் கூறிய வார்த்தைகள் விநோதாவின் அம்மாவை மௌனமாக்கின. கண் நிறைந்த கண்ணீருடன் அம்மாவைப் பார்க்கப் பொறுக்காத விநோதா, "அம்மா, நான் நிம்மியைப் பார்க்கப்போறன். இண்டைக்கு அவளுக்கு பிறந்த நாள்" என கூறி விட்டு அம்மாவின் பதிலை எதிர்பாராது தன்வீட்டின் முன்னாலிருந்த செம்மண் வீதியில் இறங்கி மெல்ல நடக்கத் தொடங்கினாள் விநோதா.

விநோதா நடந்து சென்ற ஒழுங்கையில் இருபுறமும் வேலிக்கரைகளில் விரிந்தும், விரியாதவையுமாய் முல்லையும், மல்லிகையும், நித்தியகல்யாணியும் பூத்துக் குலுங்கின. இருள் விலகும் வேளையில் அவை பனிநீராடி, பளிச்சென வெண்மையாய், தூய்மையாய் தெரிந்தன. அவை புழுதி படியாத புதிய பூக்கள். மாலையில் அவை புழுதியில் குளித்து, நிறம் மாறி, தலை சாய்ந்திருக்கப் போகின்றவை. நிம்மி கூட மனசு முழுக்க இந்த வெள்ளைப் பூக்களைப் போல் விரிந்து கிடந்தாள். விநோதா போன வருடத்தின் மார்கழி மாதத்தை நினைத்துப் பார்த்தாள்.

******

நிம்மியும் விநோதாவும் உளநலத்துறைப் பட்டப்படிப்பில் ஈடுபட்டிருந்த காலம் அது. இருவரும் சிறுவயதில் இருந்தே இணைபிரியாத நண்பிகள். விநோத், விநோதாவின் கூடப்பிறந்த ஒரே ஒரு அன்பு அண்ணன். இவர்கள் மூவரும் ஒன்றாக விளையாடி,



இவர்கள் மூவரும் ஒன்றாக விளையாடி, ஒன்றாக படித்து, ஒன்றாக உணவுண்டு வளர்ந்தவர்கள். அது ஒரு தனி உலகம். அங்கு மூவரும் தான் பிரஜைகள். அமைதியும் சந்தோஷமும் கொப்பளித்த உலகம். மூவரும் இணைந்து விநோதாவின் வீட்டிற்கு எதிரில் ஒரு பூங்காவை உருவாக்கினர். வெள்ளைநிற மலர்கள் இதழ்விரித்து சிரித்திருக்கும். மூவரின் சாம்ராஜ்யம் அந்த பூங்கா. நிம்மதியற்ற மனதிற்கு இதம் தரும் பூங்கா.

காலவோட்டத்தில் விநோத் நிம்மிமேல் கொண்ட அன்பு ஒருபடி உயர்ந்து காதலாய் மாறியபோது துள்ளிக் குதித்தாள் விநோதா. "ஆ நிம்மி என்ர அண்ணியா?" நினைக்க நினைக்க பிரமிப்பும் கற்பனையும் அவளை சந்தோஷ சாகரத்தில் தள்ளின. எல்லாவற்றையும்விட ஒரு நினைப்பே மேலோங்கி நின்றது. அதுதான் நிம்மி என்றும் விநோதாவுடன் ஒரேவீட்டில் வாழப் போகிறாள். எனும் நினைப்பு. "நாம் என்றும் பிரியோம்" என்ற மகிழ்வுடன் விநோதா. பாவம், அவளுக்கு விதி செய்யப்போகும் சதி அப்பொழுது தெரிந்திருக்கவில்லை.

நிம்மி அவள் ஓர் வெள்ளை தேவதை. மாநிறமாய், உயரமாய், மெலிதாய், அழகாய் இருப்பாள். வெள்ளை, அவளுக்குப் பிடித்த நிறம். மார்கழி 20ம் திகதி அவளது பிறந்தநாள். அவளுக்கு பிறந்த நாள் பரிசாய் விநோத்தும், விநோதாவும் வெள்ளை நிற சுடிதார் ஒன்றை முதல்நாளே பரிசளித்திருந்தனர். அவள் அதை அணிந்து, அவர்களின் தனி உலகமான அந்தப் பூங்காவுக்கு காலையில் வருவதாய் சொல்லி இருந்தாள்.

விநோதாவும், விநோத்தும் தூக்கமின்றி இரவைக் கழித்து விடிந்தும் விடியாத காலையில் எழுந்து பூங்காவுக்கு சென்றனர். நிம்மி வந்தாள். ஆசை ஆசையாய் பிறந்த நாள் வாழ்த்துக் கூறினர் விநோத்தும் விநோதாவும்.

நிம்மி, "நாங்க எங்க இருந்தாலும் என்ர பிறந்த நாளிலாவது கட்டாயம் சந்திக்க வேணும். அப்படி எண்டு எனக்கு சத்தியம் பண்ணுங்கோ" என்றாள். விநோத்தும் விநோதாவும் அவ்வாறே சத்தியம் செய்தனர். பின்பு கொஞ்ச நேரம் எதிர்காலம் பற்றிய தமது கனவுகளை பரிமாறிக் கொண்டனர்.

விநோத், "நிம்மி நீ கவலைப்படாதே, நான் உன்னையும் விநோதாவையும் விட்டிட்டு எங்கையும் போகமாட்டேன். வாழ்வோ! தாழ்வோ! அது இந்த ஈழமண்ணிலதான். சிலவேளை விநோதா தான் வெளிநாட்டுக்கு போறாளோ தெரியாது" என்றான்.

விநோதாவுக்கு கோபம் வந்தது.

"என்ன? நான் வெளிநாடு போறதோ? அதெல்லாம் நடக்காது. எனக்கு கலியாணம் ஆனாலும் நானும் என்ர புருஷனும், நீயும் நிம்மியும், அம்மாவும் ஒரு வீட்டில்தான் வாழவேணும் சரியோ?" எனகத்தினாள்.

"சரி சரி! ஏன் இப்ப கத்துறு? நாங்கள் உன்ர விருப்பத்திற்கு மாட்டமெண்டா சொன்னம்?" என விநோதாவை அமைதிப் படுத்தினாள் நிம்மி.

அந்த வேளையில் காலையில் மலர்ந்த புதிய பூக்களில் தேனருந்த ஒரு வண்ணாத்திப் பூச்சி பறந்து கொண்டிருந்தது. நிம்மியின் கண்கள் ஆசையுடன் சிறகடித்தன. "எனக்கு அந்த வண்ணாத்திப் பூச்சிய கையில வச்சுப் பார்க்க வேணும் போல இருக்கு."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என அவள் சொல்லி முடித்தாளோ, இல்லையோ? விநோதா திரும்பிப் பார்த்தாள். விநோத் வண்ணாத்திப் பூச்சியின் பின்னே சென்று கொண்டிருந்தான். வண்ணாத்திப் பூச்சி விநோத்தின் கைகளுக்கு எட்டாமல் பறந்துபோய் இன்னொரு மரத்தின் பூவில் உட்கார்ந்தது. விநோத் தொடர்ந்தான். தன் முயற்சியில் என்றும் தளராத விக்கிரமாதித்தன் போல்.

வண்ணாத்திப் பூச்சி பூங்காவிலிருந்து விலகி சற்றுத் தூரமாய் இருந்த பற்றைகளுக்கு இடையே பறந்தது. "விநோத்! வாங்கோ வேண்டாம். அந்த பற்றைகளுக்குள்ள கண்ணிவெடி இருந்தாலும் இருக்கும். எனக்கு பயமாய் இருக்கு" நிம்மி அவசரமாய் சொன்னாள்.

"என்ன உனக்கு பைத்தியமா? அதுசரி, நீ படிக்கிற பாடமும் அதுதானே, இங்க ஒரு கண்ணிவெடியும் இல்ல. அப்பிடி இருந்திருந்தால், போனகிழமை கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் வந்து பரிசோதிக்கேக்க கண்டு பிடிச்சிருப்பினம்" என்றான் விநோத். நிம்மி பதில் பேசவில்லை.

விநோத் வண்ணாத்திப் பூச்சியை தொடர்ந்து அடர்த்தியான பற்றை நிலத்தில் காலடியெடுத்து வைத்தான். விநோதாவுக்கு பயமாய் இருந்தது.

"அண்ணா! வேண்டாம் திரும்பி வந்திடு" எனக் கத்தியபடி அவன் பின்னாலே ஓடினாள். நிம்மியோ சற்றுத்தூரத்தில் "எனக்கு வண்ணாத்திப் பூச்சியே வேண்டாம். ரெண்டு பேரும் திரும்பி வாங்கோ" என கத்தியபடி ஓடிவர, "டமால்" என பெரும் சத்தம். விநோதாவின் காதுகளைப் பிளந்தது போல் இருந்தது. விநோதா தூக்கி வீசப்பட்டிருந்தாள். எங்கும் கரும்புகை எழுந்து கொண்டிருந்தது.

விநோதா கண்களை கஷ்டப்பட்டு திறந்து எழுந்திருக்க முயற்சித்தாள். அவளது வலது காலை அசைக்க முடியவில்லை. வலது முழங்காலுக்கு கீழ் அவளது காலைக் காணவில்லை. இரத்தம் பெருகி ஓடிக்கொண்டிருந்தது. விநோதா தனது கால்களைப் பற்றி சிந்திப்பதை விடுத்து படுத்திருந்த படியே விநோத்தை தேடினாள். விநோத் புகைமண்டலத்தின் நடுவே விநோதாவிற்கு சற்றுத்தூரத்தில் கையில் வண்ணாத்திப் பூச்சியுடன் இரத்த வெள்ளத்தில் கால்கள் சிதற வானத்தைப் பார்த்தபடி கிடந்தான். விநோதா அதிர்ச்சியுடன் எழ முயன்றாள். முடியவில்லை. அவளுக்கு தலை சுற்றியது. அந்த வேளையில் நிம்மி எங்கேயென திரும்பிப் பார்த்தாள். நிம்மி அவளுக்குப் பின்னால், சற்றுத்தூரத்தில் அசையாமல் நின்று கொண்டிருந்தாள். "நிம்மி வா! வா!" என கத்தினாள் விநோதா. கண்களிலிருந்து வடிந்த கண்ணீரைக் கூட துடைக்காமல் கற்சிலை போல் நின்றிருந்தாள் நிம்மி. விநோதா மயங்கிப் போனாள்.

விநோதாவுக்கு நினைவுகள் மங்கல் மங்கலாய் வந்து போயின. வெள்ளை தேவதையாய் நிம்மி, மகிழ்வோடு வண்ணாத்திப் பூச்சி தேடும் விநோத், சட்டென நினைவு வந்து " விநோத் போகாதே! வேண்டாம்" என கத்தினாள். யாரோ அவளை அசைத்து உலுப்பினர். கண்களை திறந்து பார்த்தாள் விநோதா. அம்மா எதிரே அழுகையுடன் நின்றிருந்தாள். எழமுயற்சித்த போதுதான் விநோதாவுக்கு வலதுகாலின் ஞாபகம் வந்தது. குனிந்து பார்த்தாள். "ஐயோ" என கத்தினாள். அம்மா மெல்ல அணைத்து ஆறுதல் படுத்தினாள். திடீரென விநோதாவுக்கு விநோத் ஞாபகம் வந்தது. "அம்மா! அண்ணா எங்கயம்மா? விநோத் எப்பிடி இருக்கிறான்? நான் பார்க்கவேணும்" கேள்விகளை அடுக்கினாள் விநோதா. அம்மா ஓவென கதறினாள்.

அம்மா அழ, விநோதாவும் அழத்தொடங்கினாள். அம்மா திக்கித் திணறி, யேசுநாதரைப் பறிகொடுத்த மேரிமாதாபோல் சொன்னாள்.

"அண்ணா....! இனி...... வர...மாட்டாரம்மா...." என கதறினாள். விநோதா ஏங்கிப்போய் உட்கார்ந்தாள். திடீரென நிம்மி ஞாபகம். "அம்மா! நிம்மி எங்கயம்மா" என்றாள் விநோதா.

"நிம்மி! அது.. வந்து...அவ இங்கதான் இருந்தா. இப்ப வீட்ட போயிற்றா" அம்மா தடுமாறினாள். அம்மாவின் உதடுகள் பொய் சொல்வதை கண்கள் மெய்ப்பித்தன.

"அம்மா! பொய் சொல்லுறீங்கள், என்ன நடந்ததெண்டு சொல்லுங்கோ?" என அழத்தொடங்கினாள் விநோதா.

"நிம்மிக்கு.... நடந்த சம்பவத்தைப் பார்த்ததில ஏற்பட்ட அதிர்ச்சியில இருந்து மீள முடியேல்லையாம். மனநோயாளி மாதிரி, தனியா பேசறாளாம், அழுகிறாளாம். அதால நீங்க உளநலத்துறை பயிற்சிக்காக போன ஆஸ்பத்திரியில அவளைச் சேர்த்திருக்கினமாம். நிம்மிட அம்மா சொன்னவா" என்று அம்மா உண்மையை கூறினாள்.

விநோதா எதுவும் பேசமுடியாது கண்களை மூடினாள். அவள் நினைவில் நிம்மி, விநோத், அவர்கள் கனவுகள் எல்லாம் வந்துபோயின. அவள் யாரைச் சொல்வது? வண்ணாத்திப் பூச்சி உருவில் வந்த காலனைச் சொல்வதா? விநோத்தின் விதி என்பதா? இல்லை கண்ணிவெடி அகற்றும் பிரிவின் அசட்டையான பரிசோதனையை சொல்வதா? இல்லை! அந்த சம்பவம் நிகழ்வதற்கு இரண்டு நாட்களின் முன் பெய்தமழையில் ஆழத்திலிருந்து மண்ணுக்கு மேலே வந்திருந்த கண்ணி வெடியைச் சொல்வதா? என அறியாது குழம்பிப் போகிறாள்.

சம்பவம் நிகழ்ந்து மூன்று மாதங்களின் பின் நிம்மி இருந்த மனநோய் வைத்தியசாலைக்கு வருகிறாள் விநோதா.

விநோதா, நிம்மி அருகில் நின்றிருந்தாள். நிம்மி அவளைத் திகைப்புடன் பார்த்தாள். விநோதாவுக்கு பொருத்தியிருந்த செயற்கை காலையும் பார்த்தாள்.

"நீ விநோதா தானே? விநோத் எங்கே?" மென்மையாய் கேட்டாள். விநோதா மௌனம் சாதித்தாள். நிம்மி பொறுமையிழந்து கத்தினாள் "ஏய்! எங்க என்ர விநோத்? ஏன் அவன் வரேல்ல?" அவள் பலமாய் கத்தியபடி கையில் கிடைத்த பொருட்களை எல்லாம் அவள்மீது வீசினாள். ஆஸ்பத்திரியிலிருந்த டாக்டர் ஓடிவந்தார். தொடர்ந்து வந்த மருத்துவ தாதிமார்களும் டாக்டருமாக அவளை கட்டிலில் படுக்க வைத்து மயக்க ஊசி போட்டனர். நிம்மி கண்கள் சொருக தலையணையில் சரிந்தாள். பிறகு அடிக்கடி புலம்பினாள். "விநோத், விநோதா, நான் பிறந்தநாள், வண்ணாத்திப்பூச்சி, கண்ணிவெடி போகாதே" என புலம்பினாள். விநோதா வைத்தியசாலையை விட்டு வெளியேறுகிறாள்.

அது நடந்து ஒருவருடம் ஆயிற்று. இன்று மார்கழி 20ம் திகதி. விநோதா பழைய நினைவுகளிலிருந்து விடுபட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிம்மியைப் பார்க்க மனநோய் மருத்துவமனைக்கு வேகமாய் நடக்கிறாள்.

நிம்மி, யன்னலூடாக தெரிந்த ஆகாயத்தை பார்த்தபடி கட்டிலில் இருந்தாள்.

"நிம்மி! நிம்மி! நான் விநோதா வந்திருக்கிறன்" அவளிடம் ஒரு அசைவும் இல்லை.

"நிம்மி! இண்டைக்கு உன்ர பிறந்தநாள்" அதைக் கேட்டதும் நிம்மி தீயை மிதித்தவள் போல் திரும்பினாள். "இல்லை!இல்லை! எனக்கு பிறந்தநாளே இல்லை. விநோத்! விநோத்!" என அலறிபடி மயங்கி கட்டிலில் சரிகிறாள். விநோதா கண்ணீருடன் மாலைவரை அவள் அருகில் இருந்துவிட்டு வீடு திரும்புகிறாள்.

அந்த வேளையில் காலையில் பூத்திருந்த வெள்ளைப் பூக்களெல்லாம் புழுதிபடிந்து வாடிக்கிடக்கின்றன ஒழுங்கை கரையில். அவைகளை கடந்து கண்ணிவெடியாய் கருகிய அவர்களின் பூங்காவின் அருகிலிருந்த விநோத்தின் கல்லறையை நோக்கி நடக்கிறாள் விநோதா.

ஒரு சில மரங்கள் வளர்ந்து அவன் கல்லறைக்கு நிழல் பரப்பியிருந்தன.

கல்லறையில் அமைதியாய் உறங்கும் விநோத்தை நினைத்தாள். அவன் கல்லறை மேலும் ஒரு சில வெள்ளைப் பூக்கள் உதிர்ந்து கிடந்தன! தூசி படிந்து, நிறம் மாறி! "நிம்மி அப்படித்தான் உதிர்ந்து கிடக்கிறாளோ? அந்தக் கல்லறை மேல்" என நினைத்தபடி வீடுநோக்கி நடக்கிறாள் விநோதா. ஏனெனில் மறுநாள் காலை கண்ணிவெடி அகற்றும் பிரிவில் உறுப்பினராய் சேருவதற்கான நேர்முகத்தேர்வுக்கு அவள் செல்ல வேண்டி இருந்தது. ●

அஞ்சனா

---

கடந்த இதழில் கேட்கப்பட்ட வினாக்களுக்கான விடைகள்.

1. ஜோன் நேப்பியர்
2. அந்தீஸ் மலைத்தொடர்
3 பாக்தாத்
4 ஜீன் ரூசோ
5 டேவா நீரிணை
6 நிப்போன்
7 சுவிற்சர்லாந்து
8. ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே
9 ரைகர் வூட்ஸ்
10 முகமட் அலி ஜின்னா

பரிசு பெறும் வாசகர்

ஜெயராணி

புகையிரதநிலைய வீதி,

சாவகச்சேரி.

---

## வினாக்கள் – 10

1. இஸ்ரேலிய உளவறி நிறுவனத்தின் பெயர் என்ன?
2. உலகின் மிகநீளமான மலைத்தொடர் எது?
3. போர்த்துக்கலின் தலைநகரம் என்ன?
4. வீரம் விளைந்தது நாவலின் ஆசிரியர் யார்?
5. ஹெம்லட் நாடகத்தின் ஆசிரியர் யார்?
6. புதிய பாப்பரசரின் இயற்பெயர் என்ன?
7. லெபனானின் புதிய பிரதமர் யார்?
8. "இரமதியம" சிங்களதிரைப் படத்தின் இயக்குநர் யார்?
9. 2003ம் ஆண்டுக்கான கிரிக்கெட்டின் சிறந்த நடுவர் யார்?
10. பிரான்ஷிய அரசியல் யாப்பு நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு?

சரியான பதிலை எழுதியனுப்பும் அதிஸ்டசாலி வாசகருக்கு நூல்கள் பரிசாக வழங்கப்படும்.



---

# பூச்சியம்

கவிதை

நான்
உனக்குள் சுற்றும்போது
நீ எனக்கு எல்லையாகின்றாய்
நான்
உன்னைச் சுற்றும்போது
எனக்கு ஏது எல்லை

எல்லையில்லா வெளியெங்கும்
உலாவி—
வாழ்வை
புரிந்துகொள்ள முயலும்போது
எழுகின்ற கேள்விகளுக்கும்
எல்லைகள் இல்லை

வினாக்களே
விடைகளை விழுங்கி விழுங்கி
பருத்துக்கிடப்பது
பார்வையில் ஏனோ
படுவதேயில்லை

முடிவில்
விடைகாண முடியாது
சும்மா சுகமாக
பூச்சியம் ஒன்றை இட்டுவிட்டு
தப்பித்து
மீண்டும்.....மீண்டும்.....
வரையறையற்று
வான்வெளியெங்கும் பயணம்.....

அப்போது சிலசமயம்
புரியும்.....
பெற்ற புள்ளிகளைவிட
இட்ட பூச்சியம்
சக்திமிக்கதென.....
தொடருமென் சஞ்சாரம்
மீண்டும்.......மீண்டும்.........
கேள்விகளை உருவாக்கி
உள்வாங்கி
உண்மைகளைத் தேடி..... ●

நிலாமகள்

---

## புரிதல்

புரிந்து கொள்ளுதல் கடினம்
புரிந்து கொள்ளப்படுதல் இன்னும்
கடினம்

பார்வைகள்
வம்புப் பேச்சுகள்
சில்மிஷங்கள் – என எல்லாம்
அவளைத் தொடர

புன்னகையே பதிலாய் உரைத்துவளாய்
அவள் நகர

புரிந்து கொள்ளுதல் கடினம்
புரிந்து கொள்ளப்படுதல் இன்னும்
கடினம் ●

மீநிலா

---



## உயிரோவியங்களாய்..!

அட்டைப்படக்கவிதை

உண்மை முகங்கள் தொலைக்கப்பட்டு
உணர்வுகள் ஒடுக்கப்பட்டு
விழிகளின் விழிப்பற்று
திணிக்கப்பட்ட சிந்தனைகளுடன்
கிறுக்கல் சித்திரங்களாய் எழும்
உயிரோவியங்களாய்,
நாளைய தலைவர்கள்
வரையப்படுகிறார்கள் இன்றைய
சமூகத்தால்! ●

மாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்காணல்

# நிழலில் மறைந்த நிஜங்கள்

மயூரா பிளேஸில் ஆட்டோ சாரதி என்ற தனிநபர் ஒருவரை சந்தித்துப் பேசியபோது அவர்களுடைய வாழ்க்கைநிலை சிதறி இருப்பதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது, மயூரா பிளேஸிற்கு அருகில் அமைந்துள்ள நெசவு ஆலை மூடப்பட்டமை என்று அறியக்கிடைத்தது. இந்த நெசவு ஆலை பற்றிய தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக, நெசவு ஆலைக்கு அருகில் வசித்தவரும், நெசவு ஆலை பற்றி தன்னுடைய **"மனநதியின் சிறு அலைகள்"**, **"மனித நிழல்கள்"** போன்ற நாவல்களில் எழுதிய எழுத்தாளர், விமர்சகர், பத்திரிகையாளர் கே. விஜயனைச் சந்தித்தோம்.



**நெசவு ஆலை எப்போது ஆரம்பிக்கப்பட்டது?**

இந்த நெசவு ஆலை இந்தியாவின் கவாலியூர் மகாராஜாவின் மூலதனத்தால் ஆரம்பிக்கப்பட்டது. 1911 காலப்பகுதியில் இது ஆரம்பிக்கப்பட்டதாக கூறுகிறார்கள். ஆனால் பிரிட்டிஷாரின் ஆட்சி காலப்பகுதியிலும் இவ்ஆலை இயங்கியதாக கூறப்படுகிறது.

**இங்கு வேலை செய்தவர்கள் யார்?**

இந்திய மலையாளிகள், இந்திய மூர்கள், தெலுங்கர்கள் ஆகியோரை கூட்டி வந்துதான் இவ் ஆலையை செயற்படுத்தினார்கள். ஆரம்பத்தில் சிறு நெசவு வேலை மட்டுமே இவ்வாலையில் நடைபெற்றது. பிறகு மெது மெதுவாக நெசவு தொடர்பான சகல வேலைகளும் இங்கேயே நடைபெறத் தொடங்கியது. அத்துடன் இந்திய மலையாளிகள் நெசவுத் தொழிலில் தேர்ந்தவர்கள். இந்த ஆலைக்கு அசுத்தமான பஞ்சாக உள்வருவது, அழகிய வண்ண வண்ண ஆடைகளாகவும், துணிகளாகவும் வெளியேச் செல்லும். இதில் தெலுங்கர்கள் சுத்தப்படுத்தும் வேலைகளுக்கு கூட்டி வரப்பட்டார்கள்.

**நெசவு ஆலை மூடப்பட்டமைக்கு காரணம்?**


1970 காலப்பகுதியில் அரசு நெசவு ஆலையை அரச உடைமையாக்கியது. வெளிநாட்டிலிருந்து பொருட்கள் கொண்டு வரப்படுவதை அரசாங்கம் தடை செய்தது. அதனால் நெசவு ஆலைக்கு மூலப் பொருட்கள் கொண்டு வரமுடியாது போனது. ஆலை செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்தன. அத்துடன் இரண்டு தலைமுறைகளாக ஆலையில் வேலை செய்தவர்கள் வெவ்வேறு வேலைகளுக்கு செல்லத் தொடங்கிவிட்டனர். ஆனாலும் ஆலை மூடப்படும்போது 4800 பேர் வரை தொழிலாளர்கள் அங்கு வேலை செய்து வந்தனர். அரச உடைமையாக மாறி இரண்டு வருடங்களில் நஷ்டத்தை காரணம் காட்டி அரசு ஆலையை மூடி விட்டது.

**இப்போது ஆலைக்கு பின்புறமாக கருதப்படும் மயூரா பிளேஸில் குடியமர்ந்தவர்களுக்கும் ஆலைக்கும் இருக்கும் தொடர்பு என்ன?**

மயூரா பிளேஸ் மயூராபதி அம்மன் கோயில் அருகில் இருக்கும் ஆறு அடுக்குமாடி கட்டிடங்களும் 1921ம் ஆண்டளவில் நெசவு ஆலை நிர்வாகத்தால், ஆலை தொழிலாளர்களுக்காக கட்டிக் கொடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் ஒரு வீட்டில் ஒருவர் மட்டுமே குடியிருந்தார். பின்னர் அவர் தனக்கென்று குடும்பம் ஆக, குடியமர்ந்தவர் எண்ணிக்கையும் அதிகரித்துவிட்டது. அதற்குப் பிறகு அவர்கள் அருகருகே வழிபாட்டு தலங்களையும் அமைத்துக்கொண்டு வாழத்தொடங்கிவிட்டனர். அந்தக் காலங்களில் தேசிய கிரிக்கெட் அணியை பிரதிநிதித்துவப்படுத்திய ரோய் டயஸ், பந்துல வர்ணபுர, ஸ்ரீதரன் போன்ற வீரர்கள் இப்போது கோயிலுக்கு எதிரில் இருக்கும் மைதானத்தில் விளையாடியவர்கள்.

**அரச உடைமையாக மாறிய நெசவு ஆலை நிலம் எப்படி தனியார் நிறுவனம் ஒன்றின் கைகளுக்கு வீடமைப்புத் திட்டத்திற்கு கையளிக்கப்பட்டது?**

அரச உடைமையாக இருந்தபோது மூடப்பட்ட நெசவு ஆலை பின்னர் நகர அபிவிருத்தி சபைக்கு கையளிக்கப்பட்டது. நகர அபிவிருத்தி சபை இப்போது அந்த நிலத்தை சிங்கப்பூர் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு விற்றுள்ளது.




நேர்கண்டவர்: பொ. கோபிநாத்

84 வருடங்கள் பழமைவாய்ந்த வீட்டில் வசிக்கும் அவர்களுக்கு அரசு செய்து தரப்போகும் தீர்வு என்ன? அல்லது சிங்கப்பூர் நிறுவனம் இவர்களைக் கண்டு கொள்ளுமா?

முடிவு காலத்தின் கையில்.......

**கிணறு வெட்டப் பூதம் கிளம்பிய கதையாய்**

அந்தப் பிரதேச மக்கள் உட்பட அதில் சம்பந்தப்பட்ட பலரையும் சந்தித்ததில் பல அதிர்ச்சியூட்டும் தகவல்கள் வெளிவந்தன. அவற்றையெல்லாம் உள்ளடக்கி விரிவான கட்டுரை ஒன்று வெகு விரைவில் பயில் நிலத்தில் வெளியாகும் ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனாவின் சின்னக் கதைகள்

# கொள்கை வீரன்



புத்தாண்டு பிறந்த அன்று கூ (Hu) மிக நேர்த்தியாக அழகான தனது நாட்குறிப்பில் கீழ்க்கண்டவாறு எழுதினார் "நான் உயர் கணிதத்தை நன்று பயின்று தேறும் வரை எந்தவொரு பெண்ணிடமும் காதல் கொள்ளமாட்டேன்"

ஒருவருடம் கழித்து கூ தனது உயர் கணித கற்கைநெறியில் ஒரு பகுதியையே கற்று முடித்திருந்தார். இக்காலப் பகுதியில் ஒரு அழகிய பெண்ணுடன் இவருக்கு பழக்கம் ஏற்பட்டது. இதன் விளைவால் இவர் தனது கொள்கையை சற்றுத்தளர்த்தி தனது நாட்குறிப்பில் இவ்வாறு எழுதினார். "நான் ஒரு அழகான பெண்ணை காதலிக்கின்ற போதும் எனது கற்கை நெறியை முடிக்கும் வரை அவளை திருமணம் செய்து கொள்ளப் போவதில்லை".

இன்னும் இரண்டு வருடங்கள் கழித்து கூ தனது கற்கைநெறியில் பெரிய முன்னேற்றம் கண்டிருக்கவில்லை. எனினும் திருமணம் செய்து கொண்டார். திருமண இரவு அன்று தனது நாட்குறிப்பில் கூ இவ்வாறு எழுதினார்.

"காரியத்தில் இறங்க வேண்டிய காலம் இது. எனது கற்கை நெறியை முடிக்கும் வரை குழந்தை பெற்றுக் கொள்ளப் போவதில்லை என உறுதி கொள்கிறேன்."

நான்கு வருடங்கள் கழிந்தது. கூ கற்கை நெறியை முடித்தபாடு இல்லை. பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான பாசப்பிணைப்பை அவதானித்த கூ தனக்கு ஒரு குழந்தை பெற்றுக்கொள்ள ஆசைப்பட்டார். ஒரு நாள் இரவு தனது மனைவியின் அருகில் அமர்ந்தபடி "நாங்கள் ஏன் ஒரு குழந்தை பெற்றுக் கொள்ளக் கூடாது" எனக்கேட்டார்.

"கற்கை நெறியை முடிக்கும் வரை குழந்தை பெற்றுக்கொள்வதில்லை என வாக்குறுதி கொடுத்தீர்கள் அல்லவா?" எனக் கோபத்துடன் கேட்டாள் மனைவி.

"அதெல்லாம் சரி. எல்லோரும் தங்கள் குழந்தைகளுடன் மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள். எமக்கு என்று ஒரு குழந்தை இருந்து விட்டால் குழந்தை இல்லையே என்ற கவலை இல்லாமல் நிம்மதியாக என்னால் படிக்க முடியும்"

தனது மனைவியை சம்மதிக்க வைப்பதில் கூ வெற்றி பெற்றுவிட்டார். அவர் தனது கொள்கையில் இன்னொரு மாற்றம் செய்து கொண்டார். "இறைவா, வாக்குறுதிகளை நான் காப்பாற்றாமல் போனமைக்கு என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். எனக்கு ஒரு குழந்தை இருந்தால் எனது கற்கை நெறியை முடிக்கும் முயற்சியை இருமடங்கு ஆக்குவேன்"

விரைவிலேயே கூவுக்கு ஒரு குழந்தை கிடைத்தது. அவர் குழந்தையோடு குழந்தையாக ஒன்றிப்போனார். இருந்தும் சில சமயங்களில் தனது புத்தகங்களை எடுத்து படிக்க முயற்சி செய்வார். ஆனால் அவரால் அது முடிவதில்லை. இருந்த போதும் தனது நாட்குறிப்பில் பிடிவாதமாக சிலவரிகளை பொறித்து வைத்தார். "முடிந்தவைகள் முடிந்தவைகளாகவே இருக்கட்டும். நல்லதொரு எதிர்காலம் தெரிகிறது. எனது குழந்தை வளர்ந்த பிறகு எனது கற்கை நெறியை முடிப்பதற்கான முயற்சியை மேற்கொள்வேன்."

*மூலம் : Tian Wenmao (South Garden Issue V 1983)* ●

தமிழில்: பகலவன்



# கருத்து மேடை 08

இலங்கையில் பல்கலைக்கழக நுழைவு என்பது மிகவும் கஷ்டமான விடயம். அப்படியிருக்க கஷ்டப்பட்டு பல்கலைக்கழகத்திற்குச் சென்றால் அங்கும் அரசியல் நடக்கிறது. அரசியல்வாதிகளின் சுயநலத்திற்காக பல்கலைக்கழகத்தை மூடி, மாணவர்களுடைய கல்வி செயற்பாடுகளை கெடுக்கின்றனர். இப்படி அடிக்கடி பல்கலைக் கழகங்கள் மூடப்பட்டால் மாணவர்கள் படித்து பட்டதாரியாக வரும்போது கிழவர்களாகத் தான் வெளியேறுவார்கள்.



வி. திலீபன், சாவகச்சேரி


மிகவும் சிரமப்பட்டு இரவு பகலாய் விழித்திருந்து பரீட்சை எழுதி தேர்ச்சி அடைந்தாலும், Z புள்ளிகள் எனும் பெரிய புதைகுழியைத் தாண்டி பல்கலைக்கழகத்திற்கு அனுமதி கிடைப்பதற்குள் போதும் போதுமென்றாகிவிடுகிறது. அப்படியே அனுமதி கிடைத்து எதிர்காலக் கனவுகளுடன் பல்கலைக்கழத்திற்குள் நுழைந்தால் பகிடிவதை தொல்லை. அதிலும் பல கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. பல்கலைக்கழகத்தையும் அடிக்கடி இழுத்து மூடிவிடுகிறார்கள். இது பல்கலைக்கழ கற்கை நெறிக் காலத்தை கூட்டுகிறது.

M.A.M. அசாட், பொரளை.

மாணவர்கள் இப்போது பல்கலைக்கழகம் செல்வதைவிட வீட்டில்தான் அதிக நாட்களைச் செலவிடுகிறார்கள். பேருக்குத்தான் பட்டம் கற்பவர்கள். வருடத்தில் பாதிநாள் வீட்டிலே விட்டம் பார்த்தபடி தான் இருக்கிறார்கள். பேராசிரியர்கள் மனது வைக்கவேண்டும் என்பதைவிட நாட்டை ஆட்சி செய்பவர்கள் மனது வைத்தால்தான் இந்த நிலையை மாற்ற முடியும்.

ம. ஜெயந்தி, வவுனியா.

## கருத்துமேடை – 09





மே தினநிகழ்வுகள் களியாட்டமாக நடத்தப்படுவது பற்றி உங்களுடைய அபிப்பிராயங்கள்.


கருத்துமேடைக்கான கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. கருத்துக்களை தவறாமல் எழுதி அனுப்புங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை

# சாகப்போகும் சென் கிளையர் நீர்வீழ்ச்சி



குழந்தைகளே சிறுவர்களே
இளைஞர்களே யுவதிகளே
பெரியோர்களே நண்பர்களே தோழர்களே
மண்ணின் மைந்தர்களே!
பரதேசிகளே!
"ஜில்" என நான் தரும் உணர்வை
இன்னும் எத்தனை நாள் இரசிப்பீர்கள்
கண்ணுக்கினியதென,
இன்னும் எத்தனை நாள் கதைபேசுவீர்கள்
இப்போதெல்லாம் கூட்டங் கூட்டமாய் வந்து
கூத்தடித்து, கும்மாளமிட்டு,
படமெடுக்கிறார்கள்
நான் மரணிக்க போவதாய்
படுக்க வைக்கப்பட்டிருக்கிறேனே
அதற்காக பச்சாதாபப்பட்டா
படையெடுத்து வந்து பார்க்கிறீர்கள்

இப்போதெல்லாம்
கலண்டர்கள், சஞ்சிகைகள்
பாடப்புத்தகங்கள், நுல் அடையாளங்கள்
ஏன்
ரொட்டரி கிளப் கோப்பைகளில் கூட
என் படத்தை பதித்துப் பார்ப்பதன் மர்மமென்ன?


என்னோடு சேர்ந்து அறுவரையும், துர்ப்பதற்கு
ஜப்பானிய சதியொன்று குறிபார்த்து நிற்பதை
அறியமாட்டீர்களா?
கடன் என்றவுடன் வாயைப்பிளந்து
பிச்சாப்பாத்திரம் ஏந்தி நிற்கிறது
இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு

"ஜில்" என்ற உணர்வு கண்ணுக்கினிய காட்சி
கலைக்களஞ்சிய பொக்கிஷம்
இதற்கும் அப்பால் காலங் காலமாய்
பரம்பரை பரம்பரையாய்
உங்கள் வாழ்வோடு நான் இணைந்தே இருக்கிறேன்
மின்சாரம் வேண்டும் என்று சொல்லி
எரியாத மின்குமிழை
உங்கள் கைகளிலே கொடுத்து



காட்டிக் கொடுப்பவர்களால்
சோரம் போனதே உங்கள் வாழ்க்கை
பாதுகாவலர்களால் வன்மமாய் அறுக்கப்பட்டதே
உங்கள் வாழ்வு.
உங்கள் மண்ணை காக்க
புறப்பட்ட சிவனு லட்சுமணன்
உணர்வுள்ள பிணமாய் எனது மடியிலே
உறங்குவதையும் அறியமாட்டீர்களா?
உங்களில் ஒருவனான அவனது கல்லறையும்
காணாமல் போகப் போகிறதே.

மேல் கொத்மலை என்னும் சதியால்
நீங்கள், உங்கள் உறவு, நான்,
இந்த மலைகள், நதிகள், நாகரீகங்கள், வரலாறுகள்,
நீருக்குள் புதைக்கப்பட போகிறதே!



மண்ணுக்குள் புதைக்கப்பட்டாலும்
புதைபொருள் ஆராய்ச்சி, மண் ஆராய்ச்சி என்று
உங்கள் எதிர்காலச் சந்ததி
உங்கள் வரலாற்றைத் தேடும்
மண்ணாவது மிஞ்சும்,
மீண்டும் ஒரு வாழ்வமைக்க.

நீருக்குள் அமிழ்த்துப்பட்டழிந்த
உங்கள் பரம்பரையையும் இருப்பையும்
எங்கே! யார் தேடுவது? ●

கி. மிருதுளா

## பயில்நிலம் சிறுகதைப் போட்டி

"பயில் நிலம்" முதலாவது ஆண்டு நிறைவையொட்டி புதிய எழுத்தாளர்களை உற்சாகப்படுத்தும் விதமாக சிறுகதைப் போட்டி ஒன்றினை நடத்த உத்தேசித்துள்ளது. பயில்நிலம் ஆலோசனைக் குழுவினரால் பரீசீலிக்கப்பட்டு தெரிந்தெடுக்கப்படும் 3 சிறுகதைகள் பயில்நிலம் முதலாம் ஆண்டுச் சிறப்பிதழில் பிரசுரிக்கப்படுவதோடு தகுந்த பரிசுகளும், சான்றிதழும் வழங்கப்படும்.

சிறுகதைப் போட்டியில் கலந்து கொள்பவர்கள் கவனிக்க வேண்டியவை

* சிறுகதைகள் ஒரு பக்கம் மட்டும் எழுதப்பட்டதாய் A4தாளில் 5-6 பக்கங்கள் கொண்டதாய் அமைய வேண்டும்.
* சொந்த ஆக்கமாக இருக்கவேண்டும்.
* ஏற்கனவே பிரசுரிக்கப்படாத போட்டிகளுக்கு அனுப்பப்படாத சிறுகதைகளாக இருக்க வேண்டும்.
* ஒருவர் எத்தனை சிறுகதைகளையும் அனுப்பலாம்.
* போட்டி முடிவுத் திகதி 15.07.2005
* ஆலோசனைக் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

அனுப்ப வேண்டிய முகவரி
பயில் நிலம், 59/3 வைத்தியா வீதி, தெகிவளை.

# வாசகர் மேடை



பெப்ரவரி பயில் நிலம் பார்த்தேன். சிறப்பிதழாய் மலர்ந்திருந்தது. 72 பக்கங்கள். பேப்பரின் தரமும் அதிகரித்திருந்தது. ஆனால், விலை மட்டும் அதே 20 ரூபாய். எப்படி உங்களிற்கு மட்டும் இது சாத்தியப்படுகின்றது? இந்தக் காலத்தில் இந்தக் குறைந்த விலையில் ஒரு சஞ்சிகையை வெளியிடுவது எவ்வளவு கடினம் எனக்குத் தெரியும். தங்களின் முயற்சி சிறக்க வாழ்த்துக்கள்.

*சி. கதிர்வேலமுதன், வவுனியா.*

கடந்த இதழ் பார்த்தேன். சீனாவின் சின்னக் கதைகள் படித்தேன். என்னை மிகவும் கவர்ந்தது. சிரிக்க மட்டும் அல்ல நிறைய சிந்திக்கவும் வைத்தது. இளையதம்பி தயானந்தாவுடனான நேர்காணலும் சிறப்பாக அமைந்திருந்தது. மிகவும் வெளிப்படையாகத் தன் கருத்துக்களைக் கூறி இருந்தார். " தேசத்தை முரண்பட வைத்ததே ஊடகங்கங்கள் தான்" என்று கூறும் அவரின் நேர்மை என்னை வியக்கவைத்தது. இறுதியாக, "சாப்பாட்டுக் கள்ளன்" சிறுகதையில் இடம்பெற்ற சம்பவம் உண்மையாகவே இடம் பெற்றதா? அது என்னை மிகவும் பாதித்துவிட்டது.

*உ. பிரதீபன், கிருலப்பனை*

பயில் நிலத்தின் ஒவ்வொரு இதழும் ஒவ்வொரு புதுமையுடனேயே வெளிவந்து கொண்டு இருக்கிறது. தங்களின் 1வது இதழிற்கும் இறுதி இதழிற்கும் இடையில் எத்தனை மாற்றங்கள். இவ்வளவு விரைவில் உங்களிடத்தில் இத்தனை வளர்ச்சியை உண்மையாகவே நான் எதிர்பார்த்திருக்கவில்லை.

*ச. சித்திரா, ஆனைக்கோட்டை.*

இலங்கையில் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட போதிலும் முற்று முழுதாக வெளிநாடுகளின் சம்பவங்களினையே கொண்டிருந்தது. பிற நாட்டினது நிகழ்வுகள் எமக்கு உதாரணமாக இருக்க வேண்டுமே தவிர அதற்காக பிறநாட்டினது செயற்பாடுகளை முற்றுமுழுதாக பின்பற்றலாம் என்பது சில வேளைகளில் பொருத்தமற்றதாக காணப்படும். தங்களால் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் யாவும் தமிழ் மொழியை வளர்ப்பனவாக அமைய வேண்டும். பேச்சு மொழி பயன்படுத்துவதனை குறைத்து அல்லது நீக்கி பிரசுரிப்பது நல்லது என்பது எனது கருத்து. மேலும் வெளியிடப்படும் காலத்திற்கேற்ப ஆக்கங்கள் அமைவதும் வரவேற்கத்தக்கது.

*ம. ஜெயதேவா கொழும்பு-06*

பயில் நிலம் ஏழு இதழை அறுவடை செய்தபோதும் இன்றுவரை நான் அறியாது நின்ற நிலையை நினைக்க எனக்கே வெட்கமாக உள்ளது. உண்மையில் குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓடிய கதை போல இருந்து விட்டேன். அதற்குள் என்னைக் கவர்ந்த கதை கண் முன்னே படம் பிடித்தாற் போல "சாப்பாட்டுக் கள்ளன்" கண் முன்னே கண்டது போல சிறுகதை என்னை நன்றாகக் கவர்ந்தது.

*தர்மலிங்கம் லோஜி, தையிட்டி.*



# உங்களோடு சில நிமிடங்கள்.....

அன்புள்ளம் கொண்டவர்களே, மே மாதப் பயில் நிலத்தின் மூலம் உங்களைச் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

இலங்கையின் நூல் விநியோக வலையமைப்பை புத்தகக் கடைகள் மூலமாக மட்டும் செய்துவிட முடியாதுள்ளமை இன்றைய யதார்த்தமாகும். எனவே இதனைப் புரிந்து கொண்டு எங்கள் பயில்நிலம் குழுவினர் பாடசாலைகள், கல்வி நிலையங்கள், பொது இடங்களிற்கெல்லாம் சென்று விநியோகம் செய்து வருகின்றார்கள். வெறுமனே கடமைக்காய் அச்சிட்டுவிட்டு அதனை வைத்துக் கட்டிக்காப்பதில் எங்களிற்கு உடன்பாடில்லை. இலங்கையில் நூல் வெளியீட்டு முயற்சியில் ஈடுபடுவோரின் சோர்வு அகல வேண்டும். நம்பிக்கை துளிர்க்க வேண்டும். அதற்கு நாம் முன்னுதாரணமாய்த் திகழ விரும்புகின்றோம். அதற்கான முயற்சிகளில் எங்கள் தோழமை அமைப்புக்களோடு இணைந்து ஈடுபட இருக்கின்றோம். அவை பற்றிய தகவல்களை வெகு விரைவில் உங்களிற்கு அறியத் தருகின்றோம்.

எம்மோடு பலரும் வந்து இணைந்திருக்கிறார்கள். பல இடங்களில் எம்முடைய அமைப்பின் கிளைகள் இயங்க ஆரம்பித்துள்ளன. அவர்கள் வாராவாரம் சந்தித்துக் கொள்கின்றார்கள். பயில் நிலம் படிக்கிறார்கள். விமர்சனம் செய்கிறார்கள். தாம் எழுதிய ஆக்கங்களைக் கூடிப்பயில்கிறார்கள். இது ஒரு புது அனுபவம்.

பயில் நிலத்தின் அறிமுக நிகழ்வுகள் இலங்கையின் பல பாகங்களில் பரவலாக இடம் பெற்றமை பற்றி அறிந்திருப்பீர்கள். அதன் தொடர்ச்சியாக கடந்த மாதம் 10ம் 11ம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலும், சாவகச்சேரியிலும் நூல் அறிமுகம் இடம்பெற்றது. யாழ்ப்பாணம் நாவலர் மணி மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளில் நூல் அறிமுக உரைகளை கவிஞர். தி. திருக்குமரன் அவர்களும் சட்டத்தரணி சோ. தேவராஜா அவர்களும் நிகழ்த்தினார்கள். தாயகம் ஆசிரியர், கவிஞர் க. தணிகாசலம் அவர்களின் தலைமையில் கவியரங்கு இடம்பெற்றது. கவிஞர்கள் அழ. பகீரதன், கு.பாரதி, பொ, கோபிநாத் ஆகியோர் சிறப்பான முறையில் கவியுரைத்தார்கள். மறுநாள் நிகழ்வுகள் 11ம் திகதி சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் நடைபெற்றது. இதில் நூல் அறிமுக உரைகளை றிபக்கல்லூரி அதிபர் க. அருந்தவபாலன் அவர்களும் சி.கா.செந்திவேல் அவர்களும் நிகழ்த்தினார்கள். அதனைத் தொடர்ந்து கவியரங்கும் இடம்பெற்றது.

இரண்டு நிகழ்வுகளுமே நிறைவாகவும், நம்பிக்கையை ஊட்டக் கூடிய விதத்திலும் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு முக்கியமாக விழா பற்றிய செய்திகளை மக்களிற்கு அறியப்படுத்திய ஊடகங்களைச் சேர்ந்த நண்பர்களிற்கும் எம்முடைய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். விழா ஏற்பாடுகளிற்கு உறுதுணையாய் இருந்த கு. வாசுகி, கவிஞர் தி. திருக்குமரன் அவர்களிற்கும் எங்களுடைய உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். விழா ஏற்பாட்டாளர் நகுலராஜா பிரசாந்த் பாராட்டிற்கு உரியவர்.

புதிதாக எழுத விரும்பும் நண்பர்களே வாழ்க்கையில் இருந்து எழுதுங்கள். குறிக்கோளுடன் எழுதுங்கள். குறிக்கோள் அற்ற எழுத்து உயிர் இல்லாத உடல்தான்.

மாற்றங்களை வேண்டி தொடர்ந்து எங்களோடு பயணியுங்கள் மீண்டும் சந்திப்போம். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை

# நினைத்துக் கொள்வேன்

காலை எழுந்தவுடன்
நினைத்துக் கொள்வேன்
இன்று முதல் வேலையாக
உன்னிடம் - என் காதலை
சொல்வதென்று,

கடன் எல்லாம் முடித்து - கண்ணாடி
பார்க்கும் போதும்
நினைத்துக் கொள்வேன்
"கண்டிப்பாக - இன்று
சொல்லிவிட வேண்டும்",
பஸ்ஸிலே ஏறியது - முதல்
இறங்கும் வரை
நினைத்து நினைத்து
ஒத்திகை பார்ப்பேன்
எப்படி ஆரம்பிப்பது என்று....,
பதற்றம் குறைவதற்காக
ஆலயம் சென்று
ஆண்டவனிடம்
முறைபாடு செய்து - ஒரு
ஒப்பந்தத்துடன் வெளியில் வருவேன்
சம்மதம் கிடைத்தால்
தேங்காய் உடைப்பதென்று,
உறுதியுடன் தான் நடப்பேன்
கால்கள் மட்டும் - ஏனோ
தடுமாறும் - அதை
தவிர்க்க நூலகம்
சென்றமர்வேன்
தாளொன்று விரித்து
கவிதை நடையில்
என் காதலை எழுதி
நான் எழுதியதையே
நாலு தரம் பார்த்து
மனனம் செய்வேன்,
உலர்ந்துவிட்ட உதட்டை
எச்சிலினால் ஈரப்படுத்தியபடி
உன்வீட்டுப் படலையைத்
தாண்டுவேன்,
அழைப்புமணியையும்
அழுத்திவிடுவேன் - அதுவரை
முகம் காட்டிய தைரியம்
கதவு திறப்பட்டதும்
காணாமல் போகும்,
'பிள்ளையார் சுழி' போட்டு - வலது
காலை முதலில் வைத்து
உள்ளே வருவேன்,
கதிரையில் அமர்ந்து
பத்திரிகையில் முகம் புதைத்து
அரசியல் அலசுவது போல்
பாசாங்கு செய்து கொண்டிருப்பேன்,
தூரத்திலேயே புன்னகைத்தபடி

அருகில் வருவாய்,
வெட்கம் தலைக்கேற
தலை கவிழ்ந்து
மௌனிப்பேன்.
ஒற்றைக் கையால் - என்
முகம் தூக்கி
"ஐயா ஏன் இன்று
கவலையாய்" - என்று
முகம் சாய்த்து சிரிப்பாய்.
நிமிர்ந்து - உன் முகத்தை
பார்த்தவுடன்
என் மனம் - முகவரி
மாற்றிக் கொள்ளும்
இந்த குழந்தையிடமா? - சீச்....சீ
என்று
அதற்கு பின்
உன் பேச்சிலே - மயங்கி
என்னை நான் மறந்திடுவேன்,

என்றாலும் நீ அறிய வாய்ப்பில்லை
இன்று இரவும்
நித்திரைக்கு முன்
நினைத்துக் கொள்வேன்
நாளை கட்டாயம் - உன்னிடம்
என் காதலை
சொல்லிவிட வேண்டுமென்று ! ●


ஜெயபாரதி, இரக்தவானை



*With Best Complements From....*

# Eden Jewels

*Beauty That Lasts Forever*



246, Galle Road, Colombo-06,
Sri Lanka.
Tel: 2361363, 2360364
Fax:94-1-2360365
E-mail: eden@sltnet.lk

*With Best Compliments From....*

# Lucky Land Biscuits Manufacturers

## Kundasale

Tel: 081-2420217
081-2420574
081-2227041

Fax: 081-2420740

Email- Luckyland@shnet.ik



VIJEYA ENTERPRISE

MAHARAJA FOOD PRODUCTS

Importers, Exporters, Sri Lankan Food Producers, Freight Forwarders & Clearing Agents

**No. 18/3, Dr. E.A. Cooray Mawatha, Colombo-06.**
**☎: 2360926, 2559849, Fax: 2361139**
**E-mail: maharaja@dialogslt.net**


# SARASWATHYS

Textiles & Jewellery

**No. 74,67, Super Market,**
**Nawalapitiya.**
**☎ :054 2222089**
**:0714 861092**

***Branch:***

**Pawn Brokers**
**63/1, Gampala Backlane,**
**Nawalapitiya.**
**☎ :054 2222247**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மாத இதழ் [illegible] விடயன் பிரின்டர்சில் [illegible] பட்டது